


The Trumpet of the Seventh Angel

# ஏழாம் தூதனின் எக்காளம்

1879 - 1916 ரீ-பிரிண்ட்ஸ் தமிழாக்கம்

மலர் - 9, இதழ் - 3, மே - ஜுன் 2023



R5332

## PATIENCE A CARDINAL GRACE OF CHARACTER

## பொறுமை குணலட்சணத்தின் ஒரு முதன்மையான பண்பு

"நீங்கள் தேவனுடைய சித்தத்தின்படி செய்து, வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதை பெறும்படிக்குப் பொறுமை உங்களுக்கு வேண்டியதாயிருக்கிறது."- எபிரேயர் 10:36

அப்போஸ்தலர் கிறிஸ்தவ சபையை நோக்கி. அதாவது உலகத்தை விட்டு பிரிந்து, கிறிஸ்துவை உங்கள் முன் மாதிரியாகவும் இரட்சகராகவும் ஏற்றுக்கொண்டு, அவரது அடிச்சுவட்டில் நடக்க நாடிக்கொண்டும் உங்கள் ஜீவனை கர்த்தருக்கு அர்ப்பணம் செய்திருக்கிற உங்களை நோக்கி, "உங்களுக்கு பொறுமை அவசியமாயிருக்கிறது" என்று கூறுகிறார். கிறிஸ்துவுடன் மரிக்க உங்களை அர்ப்பணித்த போது ஒரு குறிப்பிட்ட அளவு தேவனுடைய சித்தத்தை செய்தீர்கள். ஆனால் இந்த பலி என்ன என்பதையும் கிறிஸ்துவுடன் பாடுபடுகிறவர்கள் மட்டுமே அவருடன் ஆளுகை செய்வார்கள் என்பதையும் ஆரம்பத்தில் நீங்கள் உணர ஆரம்பித்ததைக் காட்டிலும் இப்பொழுது தேவனுடைய சித்தம் உங்களை அதிகமாக ஈர்த்தது.

"நீங்கள் பிரகாசிக்கப்பட்ட பிறகு" காரியங்களை மிகவும் தெளிவாக பார்த்தீர்கள். மேலும் "உபத்திரவங்களாகிய மிகுந்த போராட்டத்தை சகித்தீர்கள்." இது மிகவும் நன்றாக இருந்தது. ஆனால் சிலர் குறிப்பிட்ட காலம் தங்களது வைராக்கியத்தை வெளிப்படுத்திய பிறகு குளிர்ந்த நிலைக்கு சென்று விட்டார்கள் என்று பரிசுத்த பவுல் இந்த வசனத்தில் காண்பிக்க போகிறார். அவர்கள் நன்மை செய்வதில் சோர்ந்து விட்டார்கள். இப்படியாக அவர்கள் கிறிஸ்துவின் சபைக்குரிய தயவு, சலுகைகள் மற்றும் ஆசீர்வாதங்களிலிருந்து தங்களை விலக்கிக் கொள்ளுகிறார்கள். பொறுமையானது கிறிஸ்தவ குணலட்சணத்தின் ஒரு முக்கிய பண்பு என்பதை நினைவுகூர்ந்து, பொறுமையை தொடர்ந்து அப்பியாசப்படுத்த வேண்டும் என்பதே இருதயத்தில் இன்னும் தேவனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவர்-களுக்கு அவரது புத்திமதியாக இருக்கிறது. அநேகர் இயற்கையாகவே கொஞ்சம் அன்பையும் கொஞ்சம் தயவும், கொஞ்சம் பொறுமையும் கொஞ்சம் சாந்தமும் முதலானவைகளை உடையவர்களாக இருக்கிறார்கள். ஆனால் பரிசுத்த ஆவியின் கிருபைகளில் நாம் வளர ஆரம்பித்த பிறகு, மாம்சத்தையும், உலகத்தின் ஆவியையும் சுயநலத்தின் ஆவியையும் கட்டுப்படுத்த பொறுமை நமக்கு தேவையாயிருக்கிறது.

தேவனுடைய சித்தம் என்பது ஒரு அர்த்தத்தில் தேவனுடைய திட்ட அளவாக இருக்கிறது. பரலோகத்தில் இருக்கிற நமது பிதாவைப் போல நாம் இருக்க வேண்டும். ஆனால் நாம் விழுந்து போன ஜீவிகள் என்பதையும் பரிபூரணமாக நம்மால் செய்ய இயலாது என்பதையும் தேவன் நினைவுகூருகிறார். தேவனுடைய சித்தத்தை பூரணமான மற்றும் முழுமையான உணர்வுடன் செய்ய வேண்டும் என்றும் நமது தலைப்பு வசனம் பொருள்படவில்லை. ஆனால் அப்போஸ்தலர் வேறு இடத்தில் கூறுவது போல, நம்முடையது புத்தியுள்ள ஆராதனை, நம்மால் செய்ய இயலாததை செய்ய வேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கவில்லை.

### நமது சோதனைக்கான நோக்கம்

தேவனுடைய இந்த சித்தம் என்ன? "நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டும் என்பதே (உங்களைப் பற்றிய) தேவனுடைய சித்தமாயிருக்கிறது." (1தெசலோனிக்கேயர் 4:3) அப்போஸ்தலர் போதிப்பது போல, அர்ப்பணம் என்பது உலகத்தை விட்டு முழுமையாக முற்றிலுமாக பிரிந்திருத்தல். இப்படிப்பட்ட பிரிந்திருத்தலை ஆரம்பத்தில் நாம் செய்வோமேயானால், பிறகு பிதாவானவர் நம்மை பரிசுத்தம் பண்ணி புது சிருஷ்டிகளாக நம்மை ஜெனிப்பித்து, நம்மை பிரித்து வைக்கிறார். ஆகையால் நாம் முதலாவது நம்மை பிரித்துக் கொள்ளுகிறோம். பிறகு தேவன் நம்மை ஏற்றுக்கொண்டு, பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கிறார். பிறகு அவர் நம்மில் கிரியை நடப்பிக்கிறார்.

நாம் முழுவதுமாக நம்மை அர்ப்பணிக்கும் போது, நாம் தேவனுடைய சித்தத்தைச் செய்கிறோம், புது சிருஷ்டியில் ஒரு இடத்தை நாம் அடைகிறோம். ஆனால் நம்மை சோதனையில் வைப்பது அவரது சித்தமாக இருக்கிறது. தேவனை நாம் எந்த அளவுக்கு நேசிப்போம்? எந்த அளவுக்கு நாம் உண்மையுள்ளவர்கள்? ஒரு படையில் ஒரு போர் வீரன் அமைதியான நேரத்தில் உண்மையாக இருப்பான். ஆனால் மன அழுத்தம் இருக்கும் காலத்தில் அவன் எப்படியிருப்பான்? கொடியை கைவிட்டு ஓடுவானா? அல்லது தான் ஒரு நல்ல படை வீரன் என்பதை நிரூபிப்பானா? அதிகமான பொறுமை அவனுக்கு தேவைப்படுகிறது. அவன் தனது தேசத்தை நேசிப்பதாக சொல்வானானால், தேசத்திற்கு தேவைப்படும் போது, அவன் சகிப்புத்தன்மையும் விசுவாசமும் சோதிக்கப்படும். அவன் காவல் வேலைக்கு போக வேண்டும்; சிலசமயம் அவன் இழிவான வேலையை செய்ய வேண்டும். அவன் சோர்வடையும் அணிவகுப்பையும் பல துன்பங்களையும் சகிக்க வேண்டும். இவைகளெல்லாம் ஒரு உண்மையுள்ள போர் வீரனுக்கு தேவைப்படுகிறது. அவன் உண்மையுள்ளவனாயிருந்தால், அவனது உண்மையான ஊழியத்திற்காக அவன் பதவி உயர்வு கொடுக்கப்பட்டு, கனப்படுத்தப்படுவான்.

இப்படியாக நாமும் நமது உண்மைத்தன்மைக்கு சோதிக்கப்படுகிறோம். கிறிஸ்துவினிமித்தம் நாம் எதை சகிக்க நாம் விருப்பமுடையவர்களாயிருக்கிறோம்? எந்த அளவுக்கு நாம் முழுவதுமாக சமர்ப்பித்திருக்கிறோம்? நமது அர்ப்பணம் எந்த அளவுக்கு ஆழமாக போகிறது? கர்த்தருடைய சித்தத்திற்கு நாம் எந்த அளவுக்கு முழுமையாக இசைவாக இருக்கிறோம்? நமது அக்கறை மேலோட்டமாக இருக்கிறதா அல்லது நமது

இருதயத்துக்குள் ஆழமாக நுழைகிறதா? நாம் அர்ப்பணம் செய்வோமா? இது வெறும் கேள்வி அல்ல. கிறிஸ்தவன் இந்த அனைத்து ஆரம்ப படிகளையும் எடுத்த பிறகு, எந்த அளவிற்கு அவன் பொறுமையான சகிப்புத் தன்மை, கீழ்ப்படிதல் மற்றும் விசுவாசத்தை வெளிப்படுத்துவான்.?

தேவன் இந்த சோதனைகளை நம்மேல் வைக்கிறார். ஏனெனில் ஜெயங்கொள்ளுகிறவர்களுக்கு தேவன் மாபெரும் கனங்களை கொடுக்கவிருக்கிறார். அவர்கள் தெரிந்தெடுக்கப்பட்ட ஒரு கூட்டமாக இருக்கப் போகிறார்கள். இவர்கள் வாக்குத்தத்தத்தை பெறுவார்கள். முடிவுவரை நம்முடைய விசுவாசத்தை நிரூபித்த பிறகு வாக்குத்தத்தத்தை பெறுவோம். அதாவது அதன் நிறைவேறுதலைப் பெறுவோம் என்று அப்போஸ்தலர் கூறுகிறார்.

### வாக்குத்தத்தத்தின் சாராம்சம்

வாக்குத்தத்தமானது என்ன, எப்போது, எங்கே? வாக்குத்தத்தமானது சந்தேகத்திற்கிடமில்லாமல் உயிர்த்தெழுதலில் பெற்றுக்கொள்ளப்படும். தங்களது வீடுகள், நிலங்கள் அல்லது குழந்தைகள் அல்லது பெற்றோர் அல்லது நண்பர்கள் அல்லது கணவர்கள் அல்லது மனைவிகள் அல்லது சுயம் அல்லது வேறு எதையும் காட்டிலும் தேவனை நேசிக்கிறவர்களுக்கு அவர் வைத்திருக்கிற சகலமும் வாக்குத்தத்தம் உள்ளடக்கியிருக்கிறது.

வாக்குத்தத்தம் என்று அப்போஸ்தலர் இங்கே குறிப்பிடுவது குறிப்பிட்ட வாக்குத்தத்தம் ஆகும். தேவன் ஆபிரகாமை கல்தேய தேசத்திலிருந்து கானான் தேசத்திற்கு கொண்டு வரும்போது, ஆபிரகாமோடு தேவன் செய்த ஆதி வாக்குத்தத்தத்தோடு நமது அனைத்து நம்பிக்கைகளும் ஆசீர்வாதங்களும் மையப்படுத்தப்பட்டிருக்கிறது. ஆபிரகாமின் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல வம்சங்களும் ஆசீர்வதிக்கப்படும் என்று தேவன் வாக்குத்தத்தம் பண்ணினார். அது அவர்களுக்கு பொறுமையையும் வலிமையையும் கொடுக்கக்கூடிய உற்சாக மூட்டும் மாபெரும் வாக்குத்தத்தமாக இருந்திருக்கிறது. இந்த வாக்குத்தத்தத்தை பெறுகிறவர்களே உலகத்தை ஆசீர்வதிக்கும் ஆபிரகாமின் சந்ததியாக இருப்பார்கள் என்பதே வாக்குத்தத்தின் சாராம்சமாக இருக்கிறது. கிறிஸ்துவில் விசுவாசமுள்ளவர்கள் அவருடைய ராஜ்யத்தில் அவருடன் இணைவார்கள். இந்த ராஜ்யத்தின் கீழ் பூமியின் சகல ஜாதிகளையும் ஆசீர்வதிக்கக்கூடிய கனத்தை பெறுவார்கள். பிறகு தேவனுயை சகல ஜீவிகளும் அவரது சத்தியத்தைக் குறித்த அறிவுக்குள் கொண்டுவரப்படுவார்கள். அவன் விரும்பினால், கல்வாரியில் மீட்கப்பட்ட சகல பூரணத்தை திரும்பப்பெறும் சந்தர்ப்பத்தை பெறுவான்.

இப்பொழுது சந்தர்ப்பம் வித்தியாசமானதாக இருக்கிறது. இப்பொழுது ஆபிரகாமின் சந்ததியாக வாக்குத்தத்தத்தை சுதந்தரிக்கப் போகிறவர்களுக்கான தெரிந்துகொள்ளுதல் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. “நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால், ஆபிரகாமின் சந்ததியாராயும் வாக்குத்தத்தின்படி சுதந்தரராயும் இருக்கிறீர்கள்.” நாம் கிறிஸ்துவினுடையவர்களாயிருக்கும் படியும் அவரில் நிலைத்திருக்கவும் தொடர வேண்டும் என்று அப்போஸ்தலர் நமது தலைப்பு வசனத்தில் அறிவுறுத்துகிறார். முடிவுவரை இப்படியாக அவரில் நிலைத்திருக்கிற அனைவரும் அவருடன் மகிமையடைவார்கள். நாம் உண்மையுள்ளவர்களா -யிருக்க அவருடைய பக்தியின் ஆவியை நாம் பெற்றிருக்க வேண்டும்.

### பொறுமையான சகிப்புத்தன்மைக்கு குறிப்பிடத்தகுந்த உதாரணங்கள்

பரிசுத்த யாக்கோபு சபைக்கு கூறுகிற புத்திமதியாவது: “என் சகோதரரே, கர்த்தருடைய நாமத்தினாலே பேசின தீர்க்கதரிசிகளைத் துன்பப்படுத்தலுக்கும் நீடிய பொறுமைக்கும் திருஷ்டாந்தமாக வைத்துக்கொள்ளுங்கள்.” அப்போஸ்தலர் நோக்கி கூறின சபையார் இயேசுவின் பாடுகளை முன்னரே அறிந்திருந்தார்கள்.” அவர்கள் அப்போஸ்தலரின் விசுவாசத்தை முன்னரே அறிந்திருந்தார்கள். அவர் இப்பொழுது அவர்களது மனத்தை வேறொரு காரியத்துக்கு இழுக்கிறார். பரிசுத்தமான வாழ்க்கை வாழ்ந்தவர்களைத் திரும்பி பார்த்து, அவர்களது நீடிய பொறுமையை பார்க்கும்படி அப்போஸ்தலர் வலியுறுத்துகிறார். நம்மைச் சுற்றி வாழ்கிற சகோதரர்களோடு கூட இவர்களது திருஷ்டாந்தங்கள் நம்மை உற்சாகப்படுத்தும் பாடங்களாக இருக்க வேண்டும்.

நமது மனதை பின்னோக்கி அலைய விடும்போது எப்பொழுதும் சில காரியங்களை பெறுவாம். சமீபமாக இருக்கக்கூடிய காரியங்கள் அவற்றின் சரியான வெளிச்சத்தில் இன்னும் அருகே காணப்படுகின்றன. தேவனுடைய விருப்பத்தை கவனித்து நாம் உற்சாகம் அடையத்தக்கதாக, கடந்த கால விசுவாசிகளைப் பற்றி நமது கவனத்தை அப்போஸ்தலர் திருப்புவது சரியானதாக இருந்தது. அவருடையவர்களில், பொறுமையாகவும் உண்மையாகவும் சகிக்க விருப்பம் இருக்க வேண்டும் என்றும் இப்படியாக அவர்கள் உண்மையான குணலட்சணத்தை வெளிப்படுத்த வேண்டும் என்றும் அவர் ஆசைப்படுகிறார். அது அவரை பிரியப்படுத்துகிறது.

நாம் தீர்க்கதரிசிகளையும் பழைய ஏற்பாட்டு பதிவுகளையும் பின்னோக்கி பார்க்கும் பொழுது, அப்போஸ்தலர் குறிப்பிடுவது போல, அவர்களில் பெரும்பாலோர் கர்த்தருக்கும் விசுவாசத்தையும், அவரினிமித்தம் துன்பங்களை சகிக்க விருப்பம் உடையவர்களாக இருந்ததையும், சந்தர்ப்ப வசத்தால் அந்த அனுபவம் அவர்கள் மேல் கொண்டு வரப்படவில்லை என்பதையும் நாம் கவனிக்கிறோம். ஆபிரகாமுக்கு கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தத்தின் மேல் உள்ள விசுவாசத்தினாலும் அது நிச்சயம் நிறைவேறும் என்ற நம்பிக்கையினாலும் துன்பத்தை சகிக்க மோசே எப்படி விருப்பமுடையவராக இருந்தார் என்பதை நாம் பார்க்கிறோம். அவர் தத்தெடுக்கப்பட்ட பார்வோனின் அரச குடும்பத்தில் சந்தோஷமாக வாழ்வதற்கு பதிலாக தேவனுடைய பிள்ளைகளுடன் துன்பத்தை அனுபவிப்பதை தேர்ந்தெடுத்தார்.

பொறுமையுடன் சகித்தலுக்கும் குறிப்பிட்ட காலம் பலமான எதிர்ப்புக்குமான இன்னொரு உதாரணத்தை யோபுவில் நாம் பார்க்கிறோம். எரேமியா தனது விசுவாசத்தினிமித்தம் துன்பத்தை அனுபவித்ததையும் அதை பொறுமையுடன் சகித்ததையும் நாம் பார்க்கிறோம். இதையே தீர்க்கதரிசி தானியேலிலும், கர்த்தரிடத்தில் அவரது விசுவாசத்தையும் தேவன் அவருக்கு விரோதமாக அனுமதித்தவைகளை பொறுமையுடன் சகித்ததையும் நாம்

பார்க்கிறோம். இதே போல மற்ற தீர்க்கதரிசிகளையும் நாம் பார்க்கிறோம். நம்முடைய அறிவுரைக்காகவும் அறிவுறுத்தல்களுக்காகவும் எழுதப்பட்டிருக்கிற அனுபங்களை நாம் வாசிக்கிறோம். அவைகள் ஒரு யுகத்திற்கு உரியதாகவும் நாம் வேறு யுகத்தை சார்ந்தவர்களாகவும் இருந்தாலும் அவர்களுடைய அனுபவங்கள் நமக்கு நல்ல பாடங்களை தருகிறது. (1கொரிந்தியர் 10:6,11)

### இந்த பாடங்களின் தனிப்பட்ட பிரயோகம்

இந்த பாடங்களை நமக்கு பிரயோகித்து, தேவனுடைய வசனத்தை பேசுவதற்கு எந்த அளவுக்கு நமக்கு சலுகை கிடைத்திருந்தாலும் அதனிமித்தம் துன்பங்களை அனுபவித்து, அதை பொறுமையுடன் சகித்தோமானால், அதற்கேற்ற ஆசீர்வாதங்களையும், தேவனிடமிருந்து புகழ்ச்சியையும் அது கொண்டு வரும். ஆனால் நாம் துன்பப்படும்போது, எவ்வளவு பயங்கரமானது, பயங்கரமானது, பயங்கரமானது என்று நினைத்தால் அதில் தேவன் பிரியப்படுவார் என்று நாம் நினைக்க முடியாது. இப்படிப்பட்ட மனோபாவம் உடையவர்கள், “கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்” மற்றும் அவர்களுக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாகும் நடக்கும் என்ற வசனங்களை எடுத்துக்கொள்ளமாட்டார்கள். (2தீமோத்தேயு 3:12; ரோமர் 8:28)

யோபு பணக்காரனாகவும் செழுமையாகவும் இருக்கும் போது அவரது குடும்பம் முழுவதையும், அவரது செல்வங்களையும், அவரது ஆரோக்கியத்தையும் எடுத்துப்போட்டு, இன்னும் அவரது மனைவியையும் அவருக்கு எதிராக திருப்பி தேவன் அவரை சோதனைக்குட்படுத்தினார். எனினும் இவையனைத்திலும் யோபு தேவனுக்கு விரோதமாக திரும்பவில்லை. அவர் தேவனை நோக்கி விசுவாசத்துடன் பார்த்து உண்மையிலேயே ஆச்சரியத்துடன் அவர் வெளிப்படுத்தின வார்த்தைகளான: “இந்த தோல் முதலானவை அழுகிப்போன பின்பு, நான் என் மாம்சத்தில் இருந்து தேவனைப் பார்ப்பேன்.” இன்னும் அவரது கிருபையை பெறுவேன்; என்மேல் வருகிற அனுபவங்கள் மற்றும் துன்பங்கள் மூலம் அவர் எதற்காக எனக்கு தருகிறார் என்பதை கற்றுக்கொள்ளுவேன். “அவர் என்னைக் கொன்று போட்டாலும், அவர் மேல் நம்பிக்கையாய் இருப்பேன்.” (யோபு 13:15)

அவருடைய பரீட்சைகள் நிறைவேறின பிறகு தேவன் அவருக்கு பிள்ளைகளையும், வீடுகளையும் நிலங்களையும் மற்றும் நண்பர்களையும் திரும்பக் கொடுத்தார். இவைகள் அபரிமிதமாக திரும்ப வந்தது, மறு சீரமைப்பின் காலத்தில் ஆசீர்வாதங்களையும், மனுக்குலத்தின் உபத்திரவம் முடிவாக எப்படி தேவனிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்கு நன்மைக்கு ஏதுவாக நடத்துகிறது என்பதையும் நிழலாக காண்பிக்கிறது. கர்த்தரிடத்திலுள்ள விசுவாசத்தினாலும் அவரது ஏற்பாடுகளின் மேல் உள்ள நம்பிக்கையினாலும் இப்பொழுது துன்பத்தை அனுபவிக்கிறவர்கள், இந்த துன்பங்களையும் சோதனைகளையும் சந்தோஷமாக எடுத்துக்கொள்வார்கள். இவைகள் அவர்களுக்கு நன்மைக்கு ஏதுவாக நடத்தி, “மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது.”

**R5333** GOD BURIED MOSES, HIS SERVANT

## தேவன் அவரது ஊழியக்காரன் மோசேயை அடக்கம் பண்ணினார்

உபாகமம் 34:1-12

“கர்த்தருடைய பரிசுத்தவான்களின் மரணம் அவர் பார்வைக்கு அருமையானது.”–சங்கீதம் 116:15

மோசே, சரித்திர ஏடுகளில் உன்னதமான குணலட்சணம் உடைவர்களில் ஒருவராக இருக்கிறார். அவரது உயர் பண்பு அவரை ஒரு பெரும் தேசபக்தனாக, அவரது ஜனங்களின் தலைவனாக, நியாயாதிபதியாக, ஆளுனராக காண்பிக்கிறது. இன்னும் தேவனிடத்தில் உள்ள அவரது உறவில் இன்னும் மேலானவராக காணப்படுகிறார். அவர் யேகோவாவின் ஊழியனாக, விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதல் போன்ற மனிதப் பண்புகளை உடையவராக இருந்தார். அவர் இதில் “மோசேயை காட்டிலும் பெரியவரான” மேசியாவை நிழலாகக் காண்பிக்கிறார். நாம் வாசிப்பதாவது: “உன் தேவனாகிய கர்த்தர் என்னைப்போல ஒரு தீர்க்கதரிசியை உனக்காக உன் நடுவே உன் சகோதரரிலிருந்து எழும்பப் பண்ணுவார்.” (உபாகமம் 18:15) இஸ்ரயேலின் உண்மையான மீட்பராகவும் உலகத்தை சாத்தான், பாவம் மற்றும் மரணத்திலிருந்து மீட்பவராகவும் இருக்கும்படி யேகோவா அபிஷேகம் பண்ணப்போகிற மகா போதகர், தலைவர் மற்றும் ராஜாவுக்கு பிரதிநிதியாக அல்லது மிகச்சிறிய படமாக நான் இருக்கிறேன். (எபிரேயர் 2:14,15)

பதிவுகளிலிருந்து மோசேயின் மேன்மையை யாரும் பகுத்துணரலாம். பார்வோனின் அரண்மனையை விட்டுவிட்டு, யூத தேசத்தோடு, தன் சகோதரர்களோடு சேர்ந்து கொண்டு, அடிமைத்தனத்திலிருந்து வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்கு அழைத்துச் செல்லும் தலைவனாக ஆவதற்கு எவ்வளவு பெரிய தேசபக்தி தேவைப்படும் என்பதை யாரும் தெரிந்துகொள்ளலாம். அவரது ஜனங்களின் மத்தியஸ்தராக, தேசத்தை அழித்துப்போட்டு, அவரையும் அவரது குடும்பத்தையும் வாக்குத்தத்தத்தை சுதந்தரிக்கும் தேவனுடைய திட்டத்தை மறுத்து, அவர்களது மீறுதல்களை மன்னிக்கும்படி வேண்டின அந்த மனிதனுடைய தேச பக்தியை யாரும் அறிந்துகொள்ள முடியும். மோசேயினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அந்த பொறுப்பிற்கு தேவனிடத்தில் மாபெரும் விசுவாசம் தேவை என்பதை எவரும் காணக்கூடும். ஆனால் சிலர் மட்டுமே மோசேயின் குணலட்சணத்தை காண்கின்றனர். ஏனெனில் உண்மையான நிலைமையையும், இஸ்ரயேல் தேசத்திற்கான தெய்வீக அழைப்பையும், அவர்களது மத்தியஸ்தராக மோசேயின் வேலையையும் ஒரு சிலரே உணர்ந்து கொண்டனர்.

### தேவனுடைய ஊழியக்காரன், மோசே

“பூமியிலேயே மிகுந்த சாந்த குணமுள்ள மனிதன்,” தேவனுடைய இந்த உயர்ந்த ஊழியத்தின் மேல் நம்மால் பரிதாபம் கொள்ளாமல் இருக்க முடியாது. ஏனெனில் ஒரு குறிப்பிட்ட காரணத்தினால், ஒரு தண்டனையாக, அவருடைய ஜனங்களுடன் கானானுக்குள் நுழைவதை தடை செய்யப்பட்ட, இரண்டாம் மரணத்தில் மரிக்கிறவர்களுக்கு ஒரு பிரதிநிதியாக, ஒரு நிழலாக வைக்கப்பட்டார். அநேக வருடங்களின் பொறுமை, நீடிய

பொறுமை மற்றும் தேவனிடம் விசுவாசம் ஆகியவற்றிற்கு பிறகு, பாதுகாப்பற்ற ஒரு கணத்தில் இஸ்ரயேலின் மாபெரும் மத்தியஸ்தர் சாந்தம் மற்றும் விசுவாசத்தில் தோல்வியடைந்தார். கர்த்தரால் பாறையுடன் பேசும்படி கட்டளையிடப்பட்டார். முந்திய சந்தர்ப்பத்தில் பாறையை அடித்தது போல இரண்டாவது தடவையும் பொறுமையின்றி அவர் அடித்து கூறியதாவது: “கலகக்காரரே, கேளுங்கள், உங்களுக்கு இந்த கன்மலையிலிருந்து நாங்கள் தண்ணீர் புறப்படப்பண்ணுவோமா?”

பாறையானது ஜீவத்தண்ணீரைக் கொடுக்கக்கூடிய யுகத்தின் பாறையாகிய மேசியாவை குறிப்பிட்டது. அவர் இன்னொரு முறை அடிக்கப்பட்டார். (எபிரேயர் 6:6ஐ பார்க்கவும்)

இரண்டாம் மரண வகுப்பினருக்கு அடையாளமாக பயன்படுத்தப்பட்ட மோசே இரண்டாம் மரணத்தை அனுபவித்தார் என்றோ, தெய்வீக கிருபையிலிருந்து தன்னை துண்டித்துக் கொண்டார் என்றோ அர்த்தப்படாது. அவர் கானானுக்குள் நுழைய மாட்டார், வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்துக்குள் நுழையமாட்டார் என்ற தண்டனை நிழலான சித்திரத்தை நிறைவு செய்ய மட்டுமே உதவியது.

### கானான் பிஸ்கா மலையிலிருந்து பார்க்கப்பட்டது

பிஸ்கா என்பது நெபோ மலையின் சிகரங்களில் ஒன்று. அதிலிருந்து மோசே, எண்பது வருடங்களாக தனது விசுவாசக் கண்களால் பார்த்துக்கொண்டிருந்த, அதற்காக கடந்த நாற்பது வருடங்கள் இஸ்ராயேல் ஜாதியினரை கஷ்டப்பட்டு வழிநடத்திய வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தை ஒரு கணம் பார்த்தார். இந்த மகத்தான வயதான தேவனுடைய ஊழியக்காரன் தெய்வீக சித்தம் மற்றும் ஏற்பாடுகளிலிருந்து முழுவதுமாக விடுவிக்கப்பட்டு, அவர் ஊழியம் செய்த கர்த்தரால் நித்திரைக்குள் வைக்கப்பட்டார். தேவன் அங்கே அவரை முத்தமிட்டார் என்ற பழமொழியை யூதர்கள் கொண்டிருந்தார்கள். அவர் வைத்த கல்லறை மறைக்கப்பட்டது. சந்தேகத்திற்கிடமின்றி விக்கிரகாராதனை என்கிறதை தடுப்பதற்கு இப்படி செய்யப்பட்டது. மோசேயின் சரீரத்தை எடுத்துக்கொள்ளத் தக்கதாக சாத்தான் முயற்சித்தான் என்று புதிய ஏற்பாடு அறிவிக்கிறது. சந்தேகத்திற்கிடமில்லாமல் இது அதை வைத்து விக்கிரக ஆராதனை ஏற்படுத்தவே ஆகும். ஆனால் யேகோவா அதை தடுத்துவிட்டார்.

### மோசே மரித்து, அடக்கம் பண்ணப்பட்டார்

மோசே மரித்தார், தேவனால் குறிப்பிடப்பட்ட காலம் வரை அவர் வாழமாட்டார் என்பதையும், மேசியாவின் ராஜ்யத்தின் கீழ் அவர் உயிர்த்தெழுப்பப்படுவார் என்பதையும் நாம் கவனிக்காமல் விடக்கூடாது. இதற்கிடையில் வேதாகமத்தில் சகல மரித்தவர்களைப் பற்றி பதிவு செய்யப்பட்டுள்ளபடி அவர் தமது பிதாக்களோடே நித்திரையிலிருக்கிறார்.

மோசே மரித்தார் மற்றும் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுவதே மரித்தவர்களின் ஒரே நம்பிக்கையாக இருக்கிறது என்பதோடு, நமது கர்த்தர் மலையில் தமது மறுரூபக்காட்சியில் மோசே மற்றும் எலியாவுடன் தோன்றியதை முரண்படுத்தக்கூடாது. (1கொரிந்தியர் 15:13, 14) மோசேயோ எலியாவோ பரலோகத்திற்கு செல்லவில்லை என்பதற்கு இயேசு சொன்ன வார்த்தையே நமக்கு இருக்கிறது. அவர் கூறியதாவது: “பரலோகத்திற்கு ஏறினவன் ஒருவனுமில்லை.” (யோவான் 3:13) வெளிப்படுத்தின விசேஷத்தில் கூறப்பட்ட எக்காளம், மிருகம் முதலானவை உண்மையாயில்லாமல் தரிசனமாக இருப்பது போல, சீஷர்கள் மலையில் பார்த்தது உண்மையல்ல. அது ஒரு தரிசனம் என்று இயேசு விளக்கினார். “இந்த தரிசனத்தை ஒருவருக்கும் சொல்ல வேண்டாம்.” (மத்தேயு 17:9) பரிசுத்த பேதுரு இது குறித்து சாட்சி கூறும் போது, அது மேசியாவின் இராஜ்யத்தை குறித்ததாக அறிவித்தார். (2பேதுரு 1:16-18) மேசியாவின் மகிமையான ராஜ்யத்தில் இயேசுவோடு பங்கு பெறப்போகிற ஒரு வகுப்பாரை மோசேயும் இன்னொரு வகுப்பாரை எலியாவும் குறிப்பிட்டார்கள். இந்த ராஜ்யம், பூமியில் ஸ்தாபிக்கப்பட்டு, உலகத்தை ஆசீர்வதித்து, தீமைகளை சரிப்படுத்தி, தேவனுடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவது போல பூமியிலேயும் செய்யபடும்படி செய்யும்.

### ஆபிரகாமுக்கு தேவனுடைய வாக்குத்தத்தம்

மாம்சீக இஸ்ரயேலரோடும், ஆவிக்குரிய இஸ்ரயேலரோடும் தேவனுடைய அனைத்து தொடர்புகளுக்கும், “பூமியுள்ள சகல வம்சங்களும் உனக்குள்ளும் உன் சந்ததிக்குள்ளும் ஆசீர்வதிக்கப்படும்” என்ற ஆணையுடன் இணைந்த ஆபிரகாமுக்கு கொடுத்த அவரது மாபெரும் வாக்குத்தத்தத்தின் அடிப்படையிலானதாகும்.

மரண சாபமானது மனுக்குலத்தின் மேல் நித்திய சாபமாக இருக்கக்கூடாது என்று மிகவும் ஆரம்பத்திலிருந்தே தேவன் நோக்கங்கொண்டிருந்தார். வியாதி, துக்கம் மற்றும் வலியை நீக்கிப்போடவும், சாபத்தை நீக்கிப்போடும் காலம் வரும் என்பதையும் அவர் ஆரம்பத்திலிருந்தே திட்டங்கொண்டிருந்தார். தேவாட்டுக்குட்டியை அனுப்பவும், அதன் மூலம் உலகத்தின் சாபத்தை நீக்கி அதற்கு பதிலாக மனுக்குலத்திற்கு ஆசீர்வாதத்தை கொண்டு வரவும் ஆதியிலே முன்னேற்பாடு செய்திருந்தார். இந்த தெய்வீக நோக்கத்தைப் பற்றிய முதலாவது வெளியான அறிவிப்பு ஆபிரகாமுக்கு கொடுக்கப்பட்டது. அதாவது அவரும் அவரது சந்ததியும் மனுக்குலத்தை உயர்த்தி ஆசீர்வதிக்கும் மாபெரும் வேலையில் தேவனோடு இணைந்திருக்க வேண்டும் என்பது.

மானிட வம்சத்தில் எந்த ஒரு அங்கமும் தெய்வீக கட்டளையை பூரணமாக கைக்கொள்ள முடியாது என்பதை தேவன் அறிவார் எனினும் இந்த காரியம் உதாரணமாக இருக்கும்படி வைக்கப்பட்டது. எனினும் மேசியாவின் ஆசீர்வாதத்தை கொண்டுவர தேவன் ஆயத்தமாகும் முன்பே, அவர் யாக்கோபு மூலம் ஆபிரகாமின் சந்ததிக்கு ஒரு உறுதிமொழியை செய்தார். அதாவது தெய்வீக கட்டளையை கடைபிடிப்பதின் மூலம் அவர்களது விசுவாசத்தைக் காண்பித்தால், சகல ஜாதிகளையும் ஆசீர்வதிக்கும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஆபிரகாமின் சந்ததியாக அவர்களை பயன்படுத்த தேவன் தயாராயிருந்தார் என்பதாகும். நியாயப்பிரமாணத்தின் இஸ்ரயேலரின் பதினாறு நூற்றாண்டு கால முயற்சியை ஒன்றாக சேர்த்து பரிசுத்த பவுல் கூறுவதாவது: “எந்த மனுஷனும் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப்படுவதில்லை.” (ரோமர் 3:20)

### சந்ததியை தயார்படுத்துதல்

இது மேசியாவின் காலத்திற்கு அழைத்துச்சென்றது. லோகோஸ், ஒரு விசேஷித்த பிறப்பின் மூலமாக இயேசுவாகி, தெய்வீக முன்னறிவுக்கு இசைவாக தன்

ஜீவனை பலியாகக் கொடுத்தார். இப்படிப்பட்ட இருதயத்தில் பரிசுத்தமான சுபாவ இஸ்ரயேலர்கள், அவருடைய சீஷர்களாக, அவரது பாடுகளிலும் மரணத்திலும் பங்கு பெறவும், அவரது மகிமையிலும் தெய்வீக சுபாவத்திற்கு உயர்த்தப்படுதலிலும் பங்கு பெறுகிறவர்களாக ஆக்கப்படவும், அவரிடத்தில் கூட்டி சேர்க்கப்பட்டார்கள். இந்த தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் இயேசுவுடன் உண்மையான மோசேயை அமைக்கிறார்கள். இதன் முடிவில் தீர்க்கதரிசி மோசேயைப் போல அவர்களது சகோதரரிலிருந்து எழுப்பப்பட்டவர்களாக அவர்கள் இருந்தார்கள். இப்படிப்பட்ட "உத்தம இஸ்ரயேலர்கள்" போதுமானவர்களாகக் காணப்படாததால், தெய்வீக ஞானம் புறஜாதிகளிலிருந்து, சகல கோத்திரங்களிலும் பாஷைக்காரரிலும் ஜனங்களிலுமிருந்தும் இந்த யுகம் முழுவதும் அழைக்கப்பட்டும் தெரிந்து கொள்ளப்பட்டு கொண்டும் வருகிறார்கள்.

மேசியாவின் ராஜ்யத்தின் ஆயிரம் வருடத்தில் தேவனுக்கும் அவரிடத்தில் இழுக்கப்பட்டு அவரது ஆசீர்வாதத்தை பெற விரும்புகிற அனைவருக்கும் இடையே மத்தியஸ்தராக இருக்கப்போகிற மகா தீர்க்கதரிசியை, ஆசாரியரை, ராஜாவை, நியாயாதிபதியை தேவன் இப்படியாக படிப்படியாக தயார்படுத்திக் கொண்டு வருகிறார். இஸ்ரயேலின் ஆசாரியர்கள் அவர்களது தேசத்தோடு தொடர்புடையவர்களாக இருந்ததைப் போல இவர்கள் மனந்திரும்புகிற உலகத்தோடு தொடர்புடையவர்களாக இருப்பார்கள். ஆனால் அவர்களது உழைப்பு பயனுள்ளதாக இருக்கும், தோல்வியாக இருக்காது; ஏனெனில் அது பாவங்களுக்கான மேலான பலிகளின் அடிப்படையிலிருக்கும். (எபிரேயர் 9:23) ஆகையால் பாவங்களை மன்னிப்பதிலும் விருப்பமும் கீழ்ப்படிதலும் உள்ளவர்களை பாவம் மற்றும் மரணத்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கவும் தேவனுடைய பிள்ளைகளின் மகிமையான சுயாதீனத்தில் நுழைவதிலும் தெய்வீக வல்லமையினால் ஆதரிக்கப்பட்டது. இந்த மாபெரும் உண்மைப்பொருள் நமக்கு முன்னே இருந்து, சீக்கிரத்தில் அதன் மகிமையான நிறைவேறுதலைப் பெறும் என்று நாம் நம்புகிறோம்.

இப்படியாக தேவன் தயார்படுத்திக் கொண்டிருக்கிற மேசியா, தலையாகிய இயேசுவையும், மேசியாவின் சரீரமாகிய தெரிந்துகொள்ளப்பட்ட இஸ்ரயேலர்கள் மற்றும் அகில உலகத்தாரையும் உடையவர்களாயிருப்பார். அவர்கள் நிழலில் உள்ளது போல தேவனுடனும் உலகத்தாருடனும் உண்மையுடனும் விசுவாசத்துடனும் பற்றுடனும் இருப்பார்கள். உண்மையிலேயே இது, சகோதரர்களுக்காக தங்களது ஜீவனையும் கொடுக்கக் கூடியவர்களாக இருப்பார்களா மற்றும் தெய்வீக குணலட்சணத்தின் கொள்கைகளுக்கு உண்மையுள்ளவர்களாக இருப்பார்களா என்பதற்கான சோதனைகளில் ஒன்றாக இருக்கும்.

### இஸ்ரயேலர்களுக்கு மோசேயின் செய்தி

உபாகமம் புத்தகம் பொதுவாக மோசே இஸ்ரயேலருக்கு தனது மரண காலத்தில் கொடுத்த செய்திகள் அடங்கியதாக இருக்கிறது. அவரது மரணத்திற்கு சில நாட்களுக்கு முன்னதாக சொல்லப்பட்டிருக்கிறது. அவரது அறிவுரை அதிகாரம் 1:6 இல் ஆரம்பித்து அதிகாரம் 4:40இல் முடிவடைகிறது.

இரண்டாவது அறிவுரை அதிகாரம் 5இல் ஆரம்பித்து அதிகாரம் 26இன் முடிவில் முடிவடைகிறது.

மூன்றாவது செய்தி, அதிகாரங்கள் 27,28.

நான்காவது செய்தி, உடன்படிக்கையை உறுதிப்படுத்துதல், அதிகாரம் 29 மற்றும் 30.

யோசுவா, மோசேயின் வாரிசாக நியமிக்கப்படுவது, அதிகாரம் 31:1-8.

மோசேயின் பாட்டு, அதிகாரம் 32 "இஸ்ரயேலின் கன்மலை" அவரது அழைப்பாணை வந்த முதல் நாள் செய்தி.

அதே நாளில், கோத்திரங்களை ஆசீர்வதிப்பது, அதிகாரம் 33.

இந்த சொற்பொழிவுகளின் ஒழுங்கு, தேவனிடத்தில் நம்பிக்கையாக, வாக்குத்தத்தங்களில் விசுவாசமாக, அவர்களது உடன்படிக்கைக்கு உண்மையாக இருந்தது.

**R5334**

## FERVENCY OF SPIRIT NECESSARY TO OVERCOMING

# ஜெயங்கொள்ள ஆவியில் அனல் தேவை

"அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்; ஆவியிலே அனலாயிருங்கள்; கர்த்தருக்கு ஊழியம் செய்யுங்கள்."– ரோமர் 12:11

"கர்த்தருக்கு ஊழியம் செய்வதில் அசதியாயிராமல் ஆவியில் அனலாயிருங்கள்" என்று இந்த வசனத்தை சரியானபடி மாற்றம் செய்யலாம். கர்த்தருக்கு ஆராதனை செய்ய வேண்டும், எந்த வகையான ஆராதனை அவருக்கு பிரியமானது என்பதை நாம் கற்றுக்கொள்ளுவதில் நாம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்பதே முக்கியமான கருத்தாக, மையக்கருத்தாக இருக்கிறது.

சகலத்தையும் உண்டாக்கின மாபெரும் சிருஷ்டிகர் சகலத்தையும் வைத்திருப்பவர் ஏன் நமது ஆராதனையை விரும்புகிறார் என்று நாம் முதலாவது கேட்கிறோம். வேதாகமம் நமக்கு கூறுகிற பதிலாவது: எந்த ஒரு ஆராதனையும் அவருக்கு தேவைப்படவில்லை. அவர் தமது சொந்த திட்டத்தை நிறைவேற்ற அவர் முற்றிலுமாக திறமையுள்ளவராக இருக்கிறார். ஆனால் அவர் தமது ஊழியர்களாகிய மானிட ஜாதிகள் மாத்திரமல்ல ஆவிக்குரிய ஜாதிகளும் அவருக்கு ஒத்துழைப்பதில், அனுதாபம் காட்டுதலில் பிரியப்படுகிறார். தேவன் தமது சொந்த வல்லமையை பார்வைக்கு வைக்காமல், அவர் மையமாக இருக்கிற ஒரு திட்டத்தில் அவரது சகல

அறிவுள்ள ஜீவிகளும் பங்கு பெறும்படி அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

இது பூமிக்கடுத்த காரியங்களில் உண்மையாக இருக்கிறது. குறிப்பிட்ட சட்டங்களின்படி, இந்த பிரபஞ்சத்தில் செயல்படுகிற குறிப்பிட்ட மாபெரும் கொள்கைகளை விளக்குவதற்காக, சத்துருவானவன் காரியங்களை கவிழ்த்துப் போடவும், பாவமானது தனது போக்கில் செல்லவும் தேவன் அனுமதித்தார். நீதியின் கொள்கைகளை மீறுகிறவர்கள், பாவமானது மாசுபடுத்துவதாகவும் பரவக்கூடியதாகவும் இருப்பதால், திருப்தியளிக்காத அனுபவங்களை அதற்கேற்றாற்போல பெறுவார்கள். மாறுபாடான நிலையிலிருந்து நோக்கும் போது, பாவத்தையும் அதன் தீய செல்வாக்குகளையும் கட்டுப்படுத்த இயலாதவராக தேவன் காணப்பட்டு, அவரது நீதி, ஞானம், வல்லமை மற்றும் அன்பு ஆகியவற்றை விளக்குகிறது.

இப்பொழுது எந்த முதலீடும் தேவையில்லை. ஆனால் நாங்கள் பங்கு மார்க்கெட்டை வைத்திருப்போம், சில தொழிலாளிகள் தொழிலில் ஆர்வங்கொண்டு தொழிலில் இணைய அனுமதித்து வெளியேற அனுமதிப்போம் என்று சில பெரும் தொழில் ஸ்தாபனங்கள் கூறலாம். அது போல தேவன் அவரில்லாமல் அநேகரைப் பெற்று, மூலதனத்தை பயன்படுத்துகிறார். ஆகையால் தேவன் திட்டத்தை இதே போல ஏற்பாடு செய்தார்.

தேவனுடைய திட்டத்தில் லோகோஸ், மனிதரின் இரட்சகராகும் முதல் சந்தர்ப்பத்தை பெறவேண்டியராகவும் பூமிக்குரிய அனைத்தையும் பூரண நிலைமைக்கு கொண்டுவருபவராகவும் இருந்தார். ஆகையால் மனுக்குலத்தை மீட்க ஒரு மரணம் தேவை என்கிற திட்டத்தை ஏற்பாடு செய்தார். தேவன் வேறொரு மாறுபாடான தண்டனையை கொடுத்திருக்கலாம். அவர் பத்தாண்டு கால கிருபையற்ற நிலைமையை அல்லது வேறு எதுவோ இல்லையென்று முதல் கீழ்ப்படியாமைக்கு தண்டனையாக கொடுத்திருக்கலாம். ஆனால் அவர் அப்படிச் செய்யவில்லை. அவர் மரணத்தை தண்டனையாகக் கொடுத்தார். பிறகு அவர் மாபெரும் வார்த்தையானவரிடம் (லோகோஸிடம்) ஆதாமுக்கும் அவரது சந்ததிக்கும் மீட்கும் விலைக்கிரயமாக தமது திட்டத்தை நிறைவேற்றும்படி அவரிடம் வைத்தார். அதில் அவர் தனது ஜீவனை கொடுக்க வேண்டும், அவர் இன்னும் அதிகமான கனங்களை பெறுவார் என்பதாகும்.

ஆகையால் லோகோஸ் பிதாவானவரிடம் தமக்கிருந்த மகிமையை விட்டு, மனிதனாகி மரிக்கவும், சிலுவை மரணத்தை பெறவும் தன்னை தாழ்த்தினார். "ஆகையால் தேவன் அவரை எல்லாவற்றிற்கும் மேலாக உயர்த்தியிருக்கிறார்." இந்த விதமாக நமது கர்த்தராகிய இயேசு தேவனுக்கு சக ஊழியராக ஆகும்படி அனுமதிக்கப்பட்டார். அவர் உண்மையுள்ளவராகவும் ஆவியில் வைராக்கியமும் ஆவியில் அனலும் உடையவராகவும் இருக்க வேண்டியிருந்தது. "உம்முடைய வீட்டைக்குறித்து உண்டான பக்திவைராக்கியம் என்னை பட்சித்தது." அவர் சுயபலி கொடுக்க வேண்டியவராகவும் சுயத்தை நாடாதவராகவும் இருக்க வேண்டியிருந்தது.

இந்த காரியங்களின் சித்திரங்கள் முன்பே, அவர் உலகிற்கு வரும் முன்பே கொடுக்கப்பட்டன. மோசே வனாந்தரத்தில் சர்ப்பத்தை உயர்த்தியது போல, மனுஷகுமாரனும் உயர்த்தப்பட வேண்டியிருந்தது. நமது கர்த்தர் அவரது பூமிக்குரிய ஜீவியத்தில் கசப்பான அனுபவங்களை நிறைவேற்ற பெரிய அளவில் ஆவியின் அனல் அவருக்குத் தேவைப்பட்டது. அவருக்கு பெரிய அளவில் பிதாவினிடத்தில் விசுவாசமும் பெரிய அளவிலான பிதாவினிடத்தில் பக்தியும் தேவைப்பட்டது. இந்த சிரமங்களை அவர் ஜெயங்கொண்டது, அவர் விசுவாசமும் அனலும் கொண்டிருந்தார் என்பதை காட்டுகிறது.

## யார் நிலைநிற்கக்கூடும்?

ஆனால் நமது பரம பிதாவின் திட்டம் இதைக்காட்டிலும் பரந்து இருந்தது. இயேசுவுடன் கூட கூட்டாளிகளும் இருக்க வேண்டும் என்று தேவன் திட்டமிட்டார். நமது கர்த்தராகிய இயேசுவை பெரிய மேய்ப்பராக முன்னறிந்த தேவன் அவருடன் நம்மையும் முன்னறிந்தார் என்று அப்போஸ்தலர் அறிவிக்கிறார். தற்காலத்தில் அவரது பாடுகளில் பங்குபெற்றால்,வரக்கூடிய மகிமையிலும் நாம் பங்கு பெறுவோம். இது உலகத்தோற்றத்திற்கு முன்னே தேவனுடைய திட்டத்தில் முன்னேற்பாடாக இருந்தது.

திட்டத்தின் இந்த அம்சம் பெந்தெகொஸ்தே நாளில் வேலை செய்ய ஆரம்பித்தது. தேவனில் முன்னரே ஒரு இரட்சகராக விசுவாசம் வைத்திருந்தவர்கள் மற்றும் முன்னரே கர்த்தருக்கு தங்களது இதயங்களை அர்ப்பணித்தவர்கள், இப்படிப்பட்டவர்களின் சார்பாக, இப்படிப்பட்டவர்களுக்காக இயேசு பரலோகத்திற்கு ஏறி, தமது பலியின் புண்ணியத்தை பிரயோகிக்கும் வரை, அவர்கள் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதவர்களாக இருக்கிறார்கள். பெந்தேகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவி கொடுக்கப்பட்டது. உடனே அவர்கள் கர்த்தருக்கு ஊழியத்தை தேவனுடைய திட்டத்தில் அவசியமாக்கப்பட்டிருந்த ஊழியத்தை ஆரம்பிக்கும்படி சலுகை பெற்றார்கள். இந்த ஊழியம் இல்லாமல் அவர் செய்திருக்க முடியும், ஆனால் அவர் செய்யவில்லை. இதே ஊழியத்தை, பெறும்படி அவர் ஏற்பாடு செய்தார். உலகத்தில் சாட்சி கொடுக்கப்பட வேண்டும் என்றும் அவருடைய நாமத்திற்காக ஒரு ஜனத்தை கூட்டிச் சேர்க்க வேண்டும் என்றும், சாட்சி கொடுப்பவர்கள், அவர்களுக்கு வரக்கூடிய சோதனைகள் மற்றும் பரீட்சைகளில் தங்களது உண்மைத் தன்மையை காண்பிக்க வேண்டும் என்றும் தேவன் நோக்கங்கொண்டார்.

பிதாவானவர், தம்மை ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்ளுகிறவர்களை தேடிக்கொண்டிருக்கிறார். ஆகையால் சத்துரு, மாம்சம் மற்றும் உலகம் ஆகியவற்றின் எதிர்ப்பினால் வழியை குறுகலாக்க அனுமதிக்கிறார். அதன் மூலம் ஆவியில் அனலுள்ளவர்களைத் தவிர வேறு யாரும் சோதனைகளில் நிற்க முடியாது. மற்றவர்கள் இந்த சோதனையில் நுழைய முடியாது அல்லது வழியிலேயே விழுந்து விடுவார்கள். அது மிகவும் கடினமானது என்று கூறுவார்கள். நீங்கள் தேவனுடைய ஊழியராக இருந்தால்,

எல்லா விதமான தீமைகளும் உன்னை சுற்றியிருக்கிறது என்று அவர்கள் கூறுவார்கள். நீங்கள் மாய்மாலக்காரர் என்று அவர்கள் கூறுவார்கள். சத்துருவானவன் இதை செய்யும்படி தூண்டவில்லை, ஆனால் அனுமதிக்கிறார். அவர் தமக்கு வல்லமை குறைவாக இருக்கிறது என்பதாலோ அல்லது அதை நிறுத்த முடியவில்லை என்பதாலோ அல்ல, ஆனால் இயேசுவின் சீஷர்களாக இருக்கப்போகிறவர்கள் அனைவரையும் சோதிக்கிறார். ஆவியில் அனல் உள்ளவர்களைத் தவிர வேறு யாரும் தெரிந்துகொள்ளப்பட்ட கூட்டத்தில் இருக்க அவர் விரும்பவில்லை. ஆகையால் அப்படிப்பட்ட ஊழியங்களும் சோதனைகளும் இருக்கின்றன.

## எதிர்ப்புக்கான காரணம்

கர்த்தரை கனப்படுத்தி சேவிக்கிறவர்களுக்கு வாழ்க்கையில் பெரிய வேலை சகோதரர்களுக்கும் சத்தியத்துக்கும் ஊழியம் செய்வதாகும். சத்தியத்தை குறிக்கிற எதையும், நீதியானவைகள் நியாயமானவைகள், உண்மையானவைகள் அனைத்தையும் இந்த சிலுவை வீரர்கள் பிடித்துக் கொள்ள வேண்டும். அப்படிப்பட்டவை –களுக்கு அவர்களது அங்கீகாரத்தை கொடுத்து, மற்றவைகளுக்கு தங்களது மறுப்பை தெரிவிப்பார்கள். இதுதான் மாம்சம், உலகம் மற்றும் சத்துருவானவரின் எதிர்ப்புக்கு காரணமாயிருக்கிறது.

ஆகையால் கிறிஸ்தவர்கள் உலகத்திற்கு மரித்தவர்களாகவும் தேவனிடத்தில் ஜீவனுள்ளவர்களாகவும் ஆகிறார்கள். இப்படியாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, கிறிஸ்துவின் அங்கமாக எண்ணப்பட்டவர்கள் அனைவரும் கர்த்தருக்கும் சகோதரர்களுக்கும் சத்தியத்துக்கும் ஊழியம் பண்ணக்கூடிய தங்களது விசேஷித்த வேலையை பெற்றிருக்கிறார்கள். தனது திறமைக்கும் சந்தர்ப்பங்களுக்கும் தக்கதாக இந்த வேலையில் அவர்கள் ஈடுபட வேண்டும். இதுவே, கர்த்தருக்கு ஊழியம் செய்வதே, அவனது சிந்தையாக அல்லது மனநிலையாக இருக்க வேண்டும். அவன் ஆவியில் அனலுள்ளவனாக இருக்க வேண்டும். அலட்சியமாகவோ, வெது வெதுப்பாகவோ இருக்கக்கூடாது. கர்த்தராகிய இயேசு ஆவியில் அனலுள்ளவராக இருந்தது போல் நாமும் இருக்க வேண்டும். தேவனுக்கும் அவரது ஏற்பாடுகளுக்கான அவரது ஆவியின் அனல் அவரது ஜீவனை பட்சித்தது. தேவனுக்கு ஊழியம் பண்ணுகிறவர்களுக்கும் ஆண்டவரின் அடிச்சுவட்டில் நடக்கிறவர்களுக்கும் இப்படி இருக்க வேண்டும். தேவனுடைய ஜனங்களுக்கு வாழ்க்கையில்இதுவே பிரதானமான வேலையாக இருக்க வேண்டும்.

## நேரத்தை மீட்பது எப்படி

நமது வாழ்க்கையை நடத்துவதற்கு வேலையில் ஈடுபடுவது நமக்கு அவசியமாக இருக்கிறது. நமது விசுவாசத்தை நிரூபிப்பதற்கு தேவன் இவ்விதமாக ஏற்பாடு செய்திருக்கிறார்.மேலும் மற்ற ஜனங்கள் இதே வேலைகளில் ஈடுபட்டு தங்களது வாழ்க்கையின் இன்பங்களுக்காக உழைக்கும் பொழுது, இவர்களோடு ஓரளவுக்கு போட்டியிட பலவந்தப்படுத்தப்படுகிறோம். உன்னதமான ஒரு வேலை நமக்கு இருப்பதால் அதை பார்க்கும்படி லௌகீக சம்பந்தமான வேலைகளை முடிந்தவரை நாம் குறைத்துக் கொண்டு கர்த்தருடைய ஊழியத்திற்கு அதிக நேரத்தை பெற வேண்டும். பூமிக்குரிய காரியங்களுக்கான நமது ஆசைகள் பூமிக்குரிய பொக்கிஷங்களை சேர்த்து வைக்கவே நம்மை வழிநடத்தும். ஆனால் சுவிசேஷத்தால் நமக்கு முன் வைக்கப்பட்டிருக்கிற நம்பிக்கை பரலோகத்தில் பொக்கிஷத்தை சேர்த்து வைக்க நம்மை வழிநடத்தும். அங்கே "பூச்சி முதலானவை அங்கே கெடுப்பதில்லை."

ஆகையால் இந்த வகுப்பார் முடிந்தவரை குறைந்த அளவே சுக வாழ்வை பெறுவார்கள். ஏனெனில் அவர்களது பலத்தையும் நேரத்தையும் தேவனுடைய ஊழியத்திற்கு கொடுக்க வேண்டும். இதை அதிக அளவில் இதைச் செய்தால் தேவனுடைய பிரியமுள்ள குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாவார்கள். ஒருவன் மரவேலையில் ஈடுபட்டால் – நமது கர்த்தர் கூட இளவயதில் இந்த வேலையில் தான் ஈடுபட்டிருந்தார் – கர்த்தருடைய ஊழியத்திற்கு நான் அதிக நேரம் ஒதுக்கவும் பூமிக்குரிய காரியங்களுக்கு குறைந்த நேரம் ஒதுக்கவும் நான் எப்படி பூமிக்குரிய வேலைகளை குறைப்பேன் என்று கேட்பார். பூமிக்குரிய சுகபோகங்களை குறைப்பதே அவரது முயற்சியாக இருக்கும். பிற்கால வாழ்க்கையின் மகிமையை ஒப்பிடும் போது இந்த பூமிக்குரிய காரியங்களை நஷ்டமாகவும் குப்பையுமாக அவர் எண்ணுவார்.

நாம் எந்த அளவுக்கு சத்தியத்தை உள் வாங்கிக் கொண்டோமோ அதற்கேற்றாற்போல் ஆவியில் நாம் அனலுள்ளவர்களாயிருப்போம், பலி கொடுக்க முயற்சி செய்வோம். நமது நேரத்தையும் திறமையையும் சக்தியையும் கர்த்தருக்கு அர்ப்பணம் பண்ண முயற்சிப்போம். பூமிக்குரிய காரியங்களில் நாம் அதிகமாக பங்கெடுத்து நமது மதிப்புமிக்க நேரத்தை வீணாக்க தேவன் விரும்புவார் என்று நாம் நினைக்கூடாது. உதாரணத்திற்கு, இந்த வீட்டை நான் கர்த்தருக்கென்று வைப்பேன் என்று நாம் கூறலாம். இந்த வீட்டைப்பற்றிய பல்வேறு காரியங்களுக்கு நமது நேரத்தையும் கவனத்தையும் அதிகமாக கொடுக்கலாம். நாம் ஆபரணங்கள் மற்றும் தட்டுமுட்டு சாமான்களை வாங்கி அவைகளை கவனிப்பதற்கு அதற்கு அதிக நேரம் ஒதுக்குவதற்கு நம்மை கர்த்தர் அழைக்கவில்லை. வீட்டு வேலைகளுக்கோஅல்லது பூமிக்குரிய காரியங்களுக்கோ அதிக நேரம் ஒதுக்குகிறவர்கள் கர்த்தருடைய ஊழியத்தின் சலுகையை உணரவில்லை என்பதை காண்பிக்கிறார்கள். நாம் நம்மைச் சுற்றி பார்க்கும் போது, சகல மனிதருக்கும், விசுவாச வீட்டாருக்கும் அதிக தேவை இருக்கிறது என்பதைப் பார்க்கிறோம். "அவர்களுக்கு என்ன தேவையிருக்கிறது?" அவர்களுக்கு சத்தியம்

தேவைப்படுகிறது. சத்தியமா, பிறகு இப்பொழுது உலகத்திலும் செல்ல வேண்டுமா? ஆம், காதுள்ளவர்கள் அனைவருக்கும் செல்ல வேண்டும். சிந்தையானது சரியானபடி தரித்திருப்பதில் திருப்தியும் ஆசீர்வாதமும் இருக்கும். இன்னும் நாம் சகல ஆடம்பரமும் இல்லாமல் இந்த சத்தியத்தை பெறுகிறோம். நாம் ஜீவனை இழந்து பாடுபடுவதைக் காட்டிலும் மற்றெல்லாவற்றையும் இழந்து பாடுபடலாம்.

நம்மிடமிருந்து அனைத்தும் எடுக்கப்பட்டாலும் இந்த உலகத்தில் ஒரு பைசா கூட இல்லாமல் இருந்தாலும், நாம் சத்தியத்தை பெற்றிருந்தால் நாம் தேவனிடத்தில் செல்வந்தராக இருப்போம். இந்த புத்திக்கூர்மையும் அறிவும் நம் அனைவருக்கும் தேவைப்படுகிறது. நாம் இதை உணரும் போது, நம்மை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிப்பதில் எப்படி நாம் அலட்சியமாக இருக்க முடியும்! ஆகையால் விசுவாசித்து தேவனுடைய பிள்ளைகளாக ஆகிறவர்கள் அனைவரும் அவருடைய மாபெரும் வேலையில் ஒரு பங்கை பெறும்படியாக இந்த காரியத்தை ஏற்பாடு செய்திருக்கிறார். நாம் இந்த காரியங்களையெல்லாம் நாம் அறிந்திருப்பதால் அவைகள் நமது விசுவாசத்திற்கும் நமது அன்பிற்கும் ஒரு சோதனையாக ஆகின்றன. கர்த்தர் நம்மிடத்தில் இந்த குணலட்சணத்தை கண்டோ அல்லது காணாமலோ, திரைக்கப்பாலுள்ள கனத்துக்குரிய வேலையில் பங்களிப்பதா அல்லது வேண்டாமா என்பதை தீர்மானிப்பார்.

**R5335**

## ISRAEL UNDER A NEW LEADER

## ஒரு புதிய தலைவரின் கீழாக இஸ்ராயேல்

யோசுவா 1:1-9

"பலங்கொண்டு, திடமனதாயிரு. "– யோசுவா 1:9

இஸ்ரயேலர்கள் தங்கள் மாபெரும் தலைவர் மோசேக்கு முப்பது நாட்கள் துக்கம் அனுசரித்தார்கள். யோசுவாவை அவர்களது புதிய தலைவராக மோசேயின் மூலம் தெய்வீக நியமனத்தின்படி ஒருமனதாக ஏற்றுக்கொண்டார்கள். யோசுவாவும் மற்ற வேதாகம விசுவாச வீரர்களை போல தேவனிடத்தில் அவரது விசுவாசத்திற்கும் உண்மைத்தன்மைக்கும் புகழ்பெற்றவராக இருந்தார். அவர் மோசேயின் இடத்தை எடுத்துக் கொள்ளும் போது எண்பத்தி மூன்று வயதுடையவராகவும் எனினும் நல்ல சக்திவாய்ந்தவராகவும் அந்த பதவிக்கும் மிகவும் தகுதியானவராகவும் இருந்தார். அவரும் காலேபும் மட்டுமே இஸ்ரயேலர்கள் எகிப்தை விட்டு வரும் போது முதிர்ந்த வயதுடையவர்களாக இருந்தார்கள். அவர்கள் மட்டுமே தேவன் தமது ஜனங்களுடன் கொண்டிருந்த ஆச்சரியமான செயல்பாடுகளுக்கு சாட்சிகளாக இருந்தார்கள். கானான் தேசத்தை வேவு பார்க்கச் சென்று உற்சாக மூட்டும் அறிக்கையை கொடுத்தது இவர்கள் மட்டுமே. ஆனால் ஜனங்கள் அதை ஏற்றுக்கொள்ளாததால் வயது வந்தவர்கள் அனைவரும் அதைத் தொடர்ந்து வந்த நாற்பது வருட வனாந்தர பயணத்தில் மரித்துப்போனார்கள்.

மோசே நூற்றிருபது வயதிலும் யோசுவா தனது எண்பத்தி மூன்று வயதிலும் நல்ல பலமுள்ளவர்களாக இருந்தார்கள் என்ற உண்மை, ஆதாம் பூரணராக சிருஷ்டிக்கப்பட்டு, பிறகு "சாகவே சாவாய்" என்ற ஆதாமின் தண்டனையில் பங்குபெற்று முழு மனுக்குலமும் பாவத்திலும் மரணத்திலும் விழுந்தது என்கிற வேதாகம போதனையை நமக்கு உறுதிப்படுத்தி சத்தமாக கூறுகிறது. இந்த மனிதர்களின் புத்திக்கூர்மையும், நல்ல பலமுள்ளவர்களாக இருந்ததும் பரிணாம கொள்கையை மறுக்கிறது. ஏனெனில் இதே யோசுவா எகிப்தில் அடிமையாக இருந்தவர்.

### இஸ்ரயேலின் உண்மையான தலைவர் – தேவன்

தேவன் இஸ்ரேல் ஜாதியை தத்தெடுத்து, அவர்களிடம் ஒரு விசேஷித்த உடன்படிக்கையைச் செய்தார் என்பதை நாம் ஒரு கனம் கூட மறக்கக்கூடாது. ஆகையால் அவர் தான் அவர்களது உண்மையான அதிபதியாகவும் தலைவராகவும் இருந்தார். மோசே, யோசுவா இன்னும் மற்றவர்களும் அவரது பிரதிநிதிகளாகவும், பேசுகிறவர்களாவும் இருந்தார்கள். சர்வ வல்லவர் இஸ்ரயேலர்களை தத்தெடுத்தற்கான காரணத்தை நாம் முன்னரே குறிப்பிட்டிருந்தோம். பின்வரும் பாடங்களில் அவற்றை முழுமையாக கவனிக்கலாம்.

### புதிய தலைவரின் நாமம்

யோசுவாவுக்கு முதலில் ஓசேயா என்று பெயரிருந்தது. இரட்சிப்பு என்று அர்த்தமுடைய தீர்க்கதரிசி ஓசியாவின் அதே பெயர்தான். இத்துடன் யேகோவாவை குறிக்கிற Je என்ற முன் சேர்க்கை இருந்தது. (எண்ணாகமம் 13:16) இப்படியாக பெயர் ஜெகோசுவா என்று ஆனது. அதன் பொருள் யேகோவாவின் இரட்சிப்பு. இது சுருக்கப்பட்டு யோசுவா என்றும் இயேசுவா என்றும் ஆனது. (எண்ணாகமம் 8:17) இந்த வார்த்தை எபிரேயு வேதாகமத்தின் கிரேக்க மொழிபெயர்ப்பில் ஜீஸ் – இயேசு என்று இருக்கிறது.

யோசுவா இருபத்தி ஏழு வருடங்கள் இஸ்ரயேலின் தலைவனாக தேவனுக்கும் ஜனங்களுக்கும் உண்மையுள்ளவனாக இருந்தார். அவர் யோர்தானை கடப்பதிலும் ஒவ்வொரு பட்டணமாக ஜெயங்கொள்ளுவதிலும் மாத்திரம் அவர் வழி நடத்தாமல், தேசத்தை கோத்திரங்களுக்கு அவர்கள் ஏற்றுக்கொள்ளும் அளவுக்கு பிரித்து, கொடுத்து நூற்றி பத்தாவது வயதில் மரித்தார்.

நம்மைப் பொருத்தவரையில் தலைவராக மோசேக்கும் யோசுவாவுக்கும் எந்தவித வித்தியாசமும் இல்லை. அவர்கள் இருவரும் முற்றிலுமாக வித்தியாசமான மனிதர்கள். உண்மையிலேயே யாராவது மோசேயுடன் மாறுபட்டால் அவர்களுக்குத்தான் நஷ்டம். ஏனெனில் அவர் அப்பொழுதும் சரி அதன்பிறகும் மனிதாபிமான பண்புகளில் மிகவும் உயர்ந்தவராக இருந்தார். ஆனால் யோசுவா மோசேயைப் போல தலைவராக, சேனாதிபதியாக, பிரமாணிக்கனாக இல்லாமல் மோசேயின் உண்மையான சீஷனாக, தெய்வீக கட்டளைகளுக்கு கீழ்ப்படிபவராக இருந்தார். அவரது விசுவாசமும் ஜனங்களிடத்தில் செல்வாக்கும் அவர்களுக்கு உதவிகரமாக இருந்தது. தேவன், யோசுவா எப்படி இருக்க வேண்டும் என்று விரும்பினாரோ, அதே போல இருந்தார். இப்படிப்பட்ட சாட்சியங்களுக்கும் யார் தகுதியுள்ளவர்களாக இருக்கிறார்களோ, அவர்கள் உண்மையிலேயே உயர்ந்தவர்கள்.

கர்த்தர் யோசுவாவை நோக்கி கூறியதாவது: "என் தாசனாம் மோசே மரித்துப்போனான்; இப்பொழுது நீயும் இந்த ஜனங்கள் எல்லாம் இந்த யோர்தானைக் கடந்து, இஸ்ரயேல் புத்திரருக்கு நான் கொடுக்கும் தேசத்துக்கு போங்கள்... நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் ஒருவனும் உனக்கு முன்பாக எதிர்த்து நிற்பதில்லை; நான் மோசேயோடே இருந்தது போல உன்னோடும் இருப்பேன்; நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை. உன்னை கைவிடுவதுமில்லை... நான் உனக்கு கட்டளையிடவில்லையா? பலங்கொண்டு திடமனதாயிரு; திகையாதே, கலங்காதே. நீ போகும் இடமெல்லாம் உன் தேவனாகிய கர்த்தர் உன்னோடே இருக்கிறார் என்றார்."

## வாக்குத்தத்தத்தின் தேசம்

யோசுவாவும் இஸ்ரயேலும் கானான் தேசத்தை பலவந்தமாய் எடுத்துக்கொண்டதைப் பற்றி சிலர் கேள்வி கேட்பார்கள். ஒரு மனித ஜாதியை அழித்து இன்னொரு மனித ஜாதி அவர்களது தேசத்தை எடுத்துக்கொள்வது எந்த விதத்தில் சரியானது என்று அவர்கள் கேட்கிறார்கள். இப்படிப்பட்ட காரியத்தில் நீதி எங்கே இருக்கிறது? அன்பு அங்கே இல்லாமல் போகிறதே? மற்றவர்கள் உனக்கு என்ன செய்ய வேண்டுமென்று நீ விரும்புகிறாயோ, அதையே பிறருக்கு நீ செய் என்கிற பொன்னான பிரமாணத்தை எப்படி இங்கே பயன்படுத்த முடியும்?

இந்த கேள்விக்கு ஒரே பதில் இருக்கிறது. அது சரியானதாகவும் திருப்தியான பதிலாகவும் இருக்கிறது. பூமி அவருடையது, அதை அவர் தகப்பன் ஆதாமினால் பிரதிநிதித்துவப்படுத்துகிற மனுமக்களுக்கும் கொடுத்தார். (சங்கீதம் 115:16) இந்த பரிசு கீழ்ப்படிதல் மற்றும் விசுவாசம் போன்ற நிபந்தனைகளுக்குட்பட்டது. கீழ்ப்படியாமையும் அவிசுவாசமும் மரண தண்டனைக்குட்பட்டது. ஆதாம் இந்த தண்டனையை சுதந்தரித்துக் கொண்டார். அவரது பிள்ளைகள் பரம்பரை பிரமாணங்களின் கீழ் அவருடன் அதில் பங்கு பெற்றார்கள். ஏனெனில் அவர்கள் பாவத்தில் பிறந்து துர்குணத்தில் உருவானார்கள். இப்படியாக பாவிகள் மேலுள்ள மரண தண்டனையால் பூமியில் சகல மனுக்குலத்தின் உரிமை பறிக்கப்பட்டது.

இன்னும் ஸ்தாபிக்கப்படாத மேசியாவின் ராஜ்யத்தின் வல்லமையினாலும் மேசியாவின் மரணத்தினாலும் ஆதாம் மற்றும் அவரது இனத்தாரின் மரண சாபத்தை நீக்கும்படி தேவன் தமக்குள்ளே தீர்மானித்தார். வரவிருக்கிற இந்த ஆசீர்வாதங்களுக்கான முன்னேற்பாட்டில் தேவன் இஸ்ரயேல் தேசத்தின் மீது பொறுப்பை வைத்து அவர்களுடன் உடன்படிக்கை செய்து அவர்களை ஆசீர்வதித்தார். அவர்கள் உடன்படிக்கையின் விதிமுறைகளை நிறைவேற்றி, தேவனுடைய சிறந்த ஆசீர்வாதங்களை பெற முடியாவிட்டாலும், இஸ்ரயேலர்கள் அவர்களது நியாயப்பிரமாணத்தினால் அதிகமாக ஆசீர்வதிக்கப்பட்டார்கள். மேலும் அநேகர் ஏற்ற காலத்தில் மேசியாவின் ராஜ்யத்தில் மேசியாவுடன் ஒத்துழைக்க தயாராகி தகுதி பெற்றார்கள். இதற்கிடையில், முடிவாக உயர்ந்த தளத்தில் செயல்படப்போகிற தெய்வீக திட்டத்தின் நிழல்களாகவும் அடையாளங்களாகவும் அவர்கள் அனுபவங்கள் இருக்கும்படி சர்வ வல்லவர் அவைகளை ரத்து செய்தார். (1கொரிந்தியர் 10:11)

இஸ்ராயேலுடன் இந்த ஏற்பாட்டை நிறைவேற்றும்படி தேவன் அவர்களுக்கு வாக்குத்தத்தம் செய்து, பலஸ்தீனாவை அவர்களுக்கு கொடுத்தார். இந்த பரிசானது அவர்களது தகுதியினால் அல்ல என்பதையும் ஆபிரகாமிடம் அவர் முன்னரே கோடிட்டுக் காட்டப்பட்ட மகா திட்டத்தை தொடர்ந்து அவர் அவர்களுக்கு அளித்த கிருபை என்பதையும் தேவன் அவர்களுக்கு விளக்கினார்.மேலும் கானானியர் எந்த முன்னேற்றத்தையும் செய்யவில்லை என்றும் தொடர்ந்து அவர்கள் உயிரோடிருப்பது அவர்களுக்கு நன்மையானதோ, தேவனுக்கு மகிமையானதோ இல்லை என்றும் அவர்களுக்கு விளக்கி, தமக்கு நல்லது என்று கண்டபடி சோதோமியர்களைப் போல அவர்களை நீக்கிப்போட்டார். (எசேக்கியல் 16:49, 50)

## கடும் வேதனைக்கல்ல ஷியோலுக்கு

கானானியர்கள் அழிக்கப்பட்ட போது அவர்கள் சென்ற வேதாகமம் கூறுகிற நரகம் என்பது கிறிஸ்தவர்களின் விசுவாச கோட்பாட்டில் நமக்கு சித்தரித்துக் காண்பிக்கப்பட்ட வேதனை நிறைந்த நரகமல்ல. இஸ்ரயேலர்களால் அவர்கள் அழிக்கப்பட்ட போது அவர்கள் ஷியோலுக்கு, ஆதேசுக்கு, கல்லறைக்கு சென்றார்கள். அங்கே "செய்கையும், வித்தையும் அறிவும் ஞானமும் இல்லை." (பிரசங்கி 9:10) அங்கே அவர்கள் தங்களது முற்பிதாக்களோடு நித்திரையிலிருக்கிறார்கள். அந்த காலத்தில் நல்லவர்களும் பொல்லாதவர்களும் அங்கே இருப்பார்கள் என்று நாம் வாசிக்கிறோம். ஆபிரகாம் புறஜாதியாக இருந்த தனது முற்பிதாக்களோடு நித்திரையிலிருந்தார்.

நல்லவர்களும் கெட்டவர்களும் மரித்து தங்களது பிதாக்களோடு நித்திரையிலிருக்கிறார்கள் என்று நாம் வேதாகம சரித்திரத்திலும் வாசிக்கிறோம். மேசியாவின் ராஜ்யத்தில் நீதியான ஆளுகை ஆரம்பிக்கும் போது, அவர்கள் மகிமையான உயிர்த்தெழுதலின் காலைக்காக காத்திருக்கிறார்கள். அந்த ராஜ்யம் ஏதேனின் நிலைமையை திரும்ப கொண்டு வரும். ஆதேஸ், ஷியோல், கல்லறையில் இருக்கக்கூடிய அனைவரையும் இறுதியில் அவர்களது பழைய நிலைமைக்கு கொண்டு வரும். (1கொரிந்தியர் 15:21-29)

மனுக்குலத்தின் மரணமானது மிருகங்களின் மரணத்திலிருந்து வேறுபட்டிருக்கும். ஏனெனில் நீதிமான்களும் அநீதிமான்களும் மரணத்திலிருந்து உயிர்தெழுந்திருப்பார்கள் என்று தெய்வீக வாக்குத்தத்தம் இருக்கிறது. இந்த வாக்குத்தத்தம் நிறைவேறுதலுக்காக தேவன் முன்னரே அவருடைய குமாரனை அனுப்பியிருக்கிறார். இயேசு மானிட பாவத்திற்காக முன்னரே மரித்திருக்கிறார். இப்படியாக உயிர்த்தெழுதலுக்கான வழியை திறந்திருக்கிறார். இப்படியாக தேவன் நீதியுள்ளவராகவும் இயேசுவை ஏற்றுக்கொண்டார்களை நீதிமான்களாக்குகிறவராகவும் இருக்கிறார்.

உண்மைதான் கொஞ்சபேர் மட்டுமே அவரை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஏனெனில் கொஞ்சபேர் மட்டுமே சத்திய அறிவுக்குள் வந்திருக்கிறார்கள். உலகத்தில் மகா திரளானவர்கள் குருடராகவும், செவிடராகவும் அறியாமலும் இருக்கிறார்கள். மேசியாவின் நாளில் எல்லோரும் கல்லறையிலிருந்து எழுந்து வருவது மாத்திரமல்ல, தேவனுடைய மகிமையின் அறிவினால் பூமி முழுவதும் நிறைந்திருக்கும். அப்பொழுது குருடரின் கண்கள் திறக்கப்பட்டு, செவிடரின் செவிகள் திறவுண்டுபோம். மேசியாவின் ராஜ்யத்தில் அனைவரும் தெய்வீக கிருபைக்கு திரும்பி வரக்கூடிய சந்தர்ப்பத்தை பெறுவார்கள். இசைவுக்கு வர மறுக்கிறவர்கள் கலகக்காரர்களாக பிரிக்கப்பட்டு இரண்டாம் மரணத்தில் மரிப்பார்கள்.

உலகத்தில் வந்து எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற உலகின் ஒளியாகிய இயேசுவின் மகிமையின் காலம் வரும் போது, கானான் தேசத்தாரும் மற்ற சகல தேசத்தாரைப் போல அதில் பங்கு பெறுவார்கள். (யோவான் 1:9)

இந்த கருத்திலிருந்து பார்க்கும் போது, பலஸ்தீனாவை எந்த பிரயோஜனமும் இல்லாமல் பயன்படுத்திக் கொண்டிருந்த கானானியரிடமிருந்து எடுத்து, வரும் நன்மையான காரியங்களுக்கு நிழலாக இருக்கும்படி இஸ்ரயேலரிடம் கொடுத்தது அநீதியானது அல்ல, ஞானமானதாக இருந்தது. முன்னரே மரண தண்டனை கொடுக்கப்பட்டவர்களை கொள்ளை நோய் மற்றும் பஞ்சத்தினால் எடுப்பத்தைக் காட்டிலும் பட்டயத்தினால் எடுப்பது சரியானதாக இருக்கும். எந்த காரியத்திலும், கிறிஸ்து மூலம் அவர்களுக்கு கொடுக்கப்படுகிற தெய்வீக கிருபை அவர்களுக்கு ஆசீர்வாதமாக இருக்கும். பூமி சாபத்திலிருந்து நீக்கப்பட்டிருக்கும் போது மேசியாவின் நாளில் அது அவர்களுக்கு கிடைக்கும். அறிவொளி பெற்றவர்கள் நீதியை சிநேகித்து அக்கிரமத்தை வெறுக்கும் போது, சாபம் நீக்கப்பட்டு கர்த்தரின் ஆசீர்வாதம் அவர்கள் மேல் வரும். அப்படிப்பட்டவர்களுக்கு வருத்தமுமில்லை, மரணமுமில்லை, அலறுதலுமில்லை. தெரிந்தே தீமை செய்பவர்கள் அழிக்கப்படுவார்கள். பூமியனைத்தும் பாதுகாப்புக்குள் கொண்டு வரப்பட்டு, தேவனுடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவது போல பூமியிலும் செய்யப்படும்.

**R5326**

### ACQUAINT YOURSELF WITH GOD

# தேவனோடு நன்கு பரிச்சயம் கொள்ளுங்கள்

"பலமான ஆகாரமானது நன்மை தீமை இன்னதென்று பயிற்சியினால் பகுத்தறியத்தக்கதாக முயற்சி செய்யும். ஞானேந்திரியங்களையுடையவர்களாகிய பூரண வயதுள்ளவர்களுக்கே தகும்."–எபிரேயர் 5:14

இந்த வசனத்தில் அப்போஸ்தலர் மிகவும் அறிந்த ஒரு சரீர சம்பந்தமான உண்மையை பயன்படுத்தி, முக்கியமான ஒரு ஆவிக்குரிய சத்தியத்தை விளக்குகிறார். மானிட குழந்தைகளுக்கு பலமுள்ள ஆகாரம் அவர்களது ஜீரணத்தை கெடுத்துப்போடும். ஆனால் வயதாகும் போது பயன்படுத்தினால் மிகவும் நல்லது. அதேபோல ஆவிக்குரிய குழந்தைகளுக்கு சாதாரண சத்தியமே தேவைப்படுகிறது; அதன் மூலம் அவர்கள் குணலட்சணத்தில் அபிவிருத்தி அடைந்து, தெய்வீக திட்டத்தை பகுத்துணர கற்றுக்கொள்ளுவார்கள் என்று அப்போஸ்தலர் கூறுகிறார். பலமான ஆகாரம் பூரண வயதுள்ளவர்களுக்கு தகும் என்பதே நிச்சயமான உண்மை. பூரண வயதுள்ளவர்கள், தனக்கு தேவையான ஏற்ற உணவு எது, ருசியுள்ளது எது, பயனளிக்கக்கூடியது எது என்பதை அறிவுடன் தீர்மானிப்பார்கள். சில உணவுகளை சிலர் ஏற்றுக்கொள்ளுவார்கள். மற்றவர்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். ஒருவருக்கு ருசியுள்ளதாக இருக்கும் உணவு மற்றவருக்கு ருசியுள்ளதாக இருக்காது.

ஒருவர் ஒருவகையான உணவை சிறந்தது என்று பகுத்துணர்ந்து பயன்படுத்தினால் அதில் அவர் அபிவிருத்தியையும் பலத்தையும் பெறுவார். கிறிஸ்துவுக்குள் இருக்கிறவர்களுக்கும் இதே போல்தான். கர்த்தரின் உணவு மேஜையில் பலவிதமான உணவு வைக்கப்பட்டிருக்கும் போது நாம் அதில் எது இந்த நேரத்திற்கு தேவை என்பதை தேர்ந்தெடுப்போம்; சிலருக்கு விசுவாசம் தேவைப்படும்; சிலருக்கு பொறுமை, சிலருக்கு விடாமுயற்சி முதலானவை தேவைப்படும். ஒவ்வொருவரும் கிறிஸ்தவ அறிவிலும் அனுபவத்திலும் குறிப்பிட்ட அளவு அபிவிருத்திக்கு வருவதால், அவனது குணலட்சண குறைவுக்கு சத்திய வசனத்தின் எந்த அம்சம் தேவைப்படுகிறது என்பதை அவனால் தீர்மானிக்க முடியும். கிறிஸ்தவ அனுபவத்தின் ஆரம்பத்தில் ஒருவரால் நன்மையையும் தீமையையும் பகுத்துணர இயலாது. ஒரு குழந்தைத்தன மனம் வேத வாக்கியங்களை தவறாக அர்த்தப்படுத்திக்கொள்ளலாம், அல்லது ஒரு சந்தர்ப்பத்தின் வசனத்தை வேறு வசனத்துடன் இணைத்து ஒரு தவறான முடிவுக்கு வரலாம். ஆனால் முதிர்ந்த மனத்தை உடையவர்கள் இப்படி வேதவாக்கியங்களை சேர்ப்பது தீங்கானது என்பதைக் காண்பார்கள்.

**நன்மை தீமையை குறைவாக உணருதல்**

சில கிறிஸ்தவ ஜனங்கள் வேதாகம சத்தியங்களில் இடறி, அவற்றிலிருந்து தீமையை செய்வார்கள். உதாரணத்திற்கு, நமது நல்ல சகோதரன் கேல்வின் நன்மை, தீமையை தெளிவாக உணரவில்லை. அதன் பலனால், சபையின் தேர்வு குறித்த போதனையிலிருந்து நன்மையை பெறுவதற்கு பதிலாக, தீமையான போதனையை கொண்டு வந்தார். அதாவது தெரிந்தெடுக்கப்படாதவர்கள் நித்திய தண்டனைக்குரியவர்கள் என்று கூறினார். அவரது புதிய சிந்தை சத்திய வசனத்தை நிதானமாய் பகுத்து போதிப்பதற்கு போதுமான அளவு அபிவிருத்தி அடையவில்லை. (2 தீமோத்தேயு 2:15) தேவனுடைய குணலட்சணத்தை போதுமான அளவுக்கு உணர்ந்து கொண்டவர்கள், தவறான போதனைகளுக்கு பதிலாக, தேவன் நமது மானிட இனத்தை அவர்களது சிருஷ்டிப்புக்கு முன் அவர்களை நித்திய தண்டனைக்கு அனுப்ப தீர்மானிக்கமாட்டார் என்பதை அறிந்து கொள்வார்கள்.

தற்கால ஜனங்களில் அநேகர் தங்களது உணர்வுகளை பொது அறிவுடன் அப்பியாசப்படுத்துவதில்லை. அவர்கள், ஒரு மனிதன் செய்ய நினைக்காததைக் கூட தேவன் செய்வதாக அவர் மேல் குற்றஞ் சுமத்துகிறார்கள். "அவர்களது உணர்வுகளை அப்பியாசப்படுத்துவதில்லை" என்ற இந்த சொற்றொடர் வெறும் மனதை மாத்திரமல்ல இருதயத்தையும் உள்ளடக்கியிருக்கிறது. சகோதரர் கேல்வின் வெளியரங்கமாக திறமையான சிந்தையை பெற்றிருந்தார்; ஆனல் அவரது இருதயம் தேவனுடனான உறவை பெற்றிருக்கவில்லை; ஏனெனில் கர்த்தருடைய குணலட்சணத்தை அவர் அறிந்திருந்தால், நித்திய ஆக்கினை என்கிற போதனை தேவனுடைய குணலட்சணத்தின் ஒவ்வொரு பகுதிக்கும் விரோதமானது என்பதை அறிந்திருப்பார். (எரேமியா 7:31; 19:5)

சகோதரர் வெஸ்லி, கர்த்தரின் குணலட்சணத்தைக் குறித்த ஆவிக்குரிய உணர்வுகளில் அபிவிருத்தி அடைந்திருந்தார் என்று நாங்கள் தீர்மானிக்கிறோம். அவர் கேல்வினை விட வாத பொருத்தமுடையவராயிருந்தார் என்பதில் சந்தேகம் கொள்ளுகிறோம். ஆனால் அவர்

தேவனுடனான இருதய உறவை பெற்றிருந்தார். கேல்வினால் சொல்லப்பட்டது போல தேவனால் திட்டமிட இயலாது என்று வெஸ்லி சரியானபடி தீர்மானித்தார். நமது சொந்த விஷயத்திலும் கூட நாம் மேலெழுந்தவாரியான அறிவை பெற்றிருக்கிறோம் என்பதையும் ஆனால் இன்னும் ஆவிக்குரிய வளர்ச்சியை, தேவனைப்பற்றி இருதய பூர்வமான அறிவை பெறவில்லை என்பதையும் நாம் அறிவோம். நாம் வேதாகமத்தின் அறிவுப்பூர்வமான ஆழ்ந்த அறிவையோ அல்லது வேதாகம வார்த்தைகளில் பரிச்சயத்தை மட்டும் பெற நாம் நாடாமல் வசனங்களுக்கு பின்னால் இருக்கிற உணர்வு பூர்வமானதை. ஆவியை பரலோகப் பிதாவின் குணலட்சணத்தை, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் குணலட்சணத்தை, அவர்களின் ஆவியை, நாமும் பெறப்போகிற ஆவியை நாட வேண்டும்.

### ஆழமான ஆராய்ச்சி பயனுடையது

நமது கால ஜனங்களின் வேதாகம ஆராய்ச்சியைப் பற்றி பேசும் போது, அங்கே கொடுக்கப்படுகிற ஆழமான ஆவிக்குரிய சத்தியத்தை உணரவும் ஆராயவும் தவறுகின்றனர். அது மாத்திரமல்ல, அங்கே காணப்படுகிற பூலோக, சரித்திர மற்றும் மனத்தத்துவம் முதலானவைகளில் திருப்தி அடைகிறதாக காண்கின்றனர். இந்த நிலைமைகளை நாம் பார்ப்பதால், அப்போஸ்தலர் காலத்தைப் போலவே, தற்கால பெரும்பாலான கிறிஸ்தவர்களுக்கும், கிறிஸ்துவின் போதனைகளின் அடிப்படை கொள்கைகளை மறுபடியும் போதிப்பது அவசியமானது என்று நாம் தீர்மானிக்க வேண்டியிருக்கிறது.

இதே வழியில் அப்போஸ்தலர் பேதுரு கூறுகிறதாவது: “நீங்கள் வளரும்படி, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின் மேல் வாஞ்சையாயிருங்கள்.” (1பேதுரு 2:3) நம் அனைவருக்கும் சாதாரண காரியங்கள் தேவைப்படுகிறது. ஆனால் வளர்ச்சியடையாத ஆவிக்குரிய குழந்தை முழு மனித பருவத்தை அடையாது. அவன் ஒரு ராஜாவாகவும் ஆசாரியனாகவும் ஆகவே முடியாது. அவன் தேவனுடனான உண்மையான பரிச்சயத்தை பெற வேண்டும். “ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன்.” தேவனைப் பற்றியும் இயேசு கிறிஸ்துவை பற்றியும் சும்மா அறிவது அல்ல, “அவர்களுடன் நன்கு பரிச்சயமாகக் கூடிய உணர்வுகளுடன் அறிவது ஆகும். நாம் அதே அறிவுடன் அவர்களை அறிந்து, அதில் வளர்ந்து, “தேவனுடைய ஆழங்களை ஆராய வேண்டும்.”

**R5338**

## THE DAWN OF THE MORNING
# காலையின் விடியல்

“இரவு சென்று போயிற்று, பகல் சமீபமாயிற்று; ஆகையால் அந்தகாரத்தின் கிரியைகளை நாம் தள்ளிவிட்டு, ஒளியின் ஆயுதங்களைத் தரித்துக்கொள்ளக்கடவோம். களியாட்டமும், வெறியும் உள்ளவர்களாய் நடவாமல், பகலில் நடக்கிறவர்களைப்போல சீராய் நடக்கக்கடவோம்.” – ரோமர் 13:12.13

உலகமானது நீண்ட காலமாக ஏறக்குறைய இருளிலும் பாவத்திலும் அறியாமையிலும் மூடநம்பிக்கையிலும் இருந்தது. ஒரு மனிதனின் கீழ்ப்படியாமையினால் பாவம் உலகத்தில் நுழைந்தது. இந்த இருளானது இன்னும் தொடருகிறது. இருள் பூமியையும் காரிருள் ஜனங்களையும் மூடும். மனிதன் பரம்பரையாக பாவத்தில் பிறக்கிறான் என்றும், சாத்தான் மனுக்குலத்தை மகா சிருஷ்டிகரிடமிருந்து இன்னும் இன்னும் அந்நியப்படுத்தும் நோக்கத்துடன் நிலைமையை அவன் பயன்படுத்திக்கொள்ளுகிறான் என்றும் இப்படியாக முடிந்தவரை நல்லிணக்கம் ஏற்படாதபடி தடுத்துக்கொண்டிருக்கிறான் என்றும் இந்த நிலைமையை குறித்து வேதாகமமானது விவரித்துக் கூறுகிறது.

சாத்தான் இருளின் அதிபதி என்று அழைக்கப்படுகிறான். கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில் அவன் கிரியை நடப்பிக்கிறான். கீழ்ப்படிகிற பிள்ளைகளைக் காட்டிலும், கீழ்ப்படியாமையின் பிள்ளைகள் அதிகமாக இருப்பதால், இந்த காலம் இருளான காலம் என்று சொல்லப்படுகிறது. தேவன் மனுக்குலத்தை இருளிலேயே விட்டுவிடமாட்டார் என்று வேதாகமம் நமக்கு கூறுகிறது. ஆனால் இருளானது நீக்கப்பட்டு, இருளும் சிதறடிக்கப்படும். அதற்கு பதிலாக அவருடைய வெளிச்சம், அவருடைய ஆசீர்வாதம் வரும். சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறது போல தேவனுடைய மகிமையின் அறிவின் ஒளியானது பூமியை நிரப்பும். (ஏசாயா 11:9; ஆபகூக் 2:14) இந்த மீட்புக்கான தெய்வீக ஏற்பாடுகள் உலகத்தோற்றத்துக்கு முன்னே செய்யப்பட்டிருந்தது.

### உலகின் ஒளி

தேவன் வாக்குத்தத்தம் பண்ணினவைகளை கொண்டுவரும்படி ஏறக்குறைய பத்தொன்பது (தற்போது இருபது) நூற்றாண்டுகளுக்கு முன்பு அவர் நடவடிக்கை எடுக்க ஆரம்பித்தார். முதலாவது நடவடிக்கை மனுக்குலத்தின் இரட்சகராயிருக்கும்படி தமது குமாரனை அனுப்பினது. பரலோக பிதா, ஜோதிகளின் பிதா என்று அழைக்கப்படுகிற அதே பொருளில் நமது கர்த்தர் ஒரு மாபெரும் வெளிச்சம் என்று பேசப்படுகிறார். இயேசு கூறினதாவது: “நான் உலகத்துக்கு ஒளியாக இருக்கிறேன்.” மனுக்குலமானது சாத்தானுடைய செல்வாக்கின் கீழும் அவர்களது அபூரண தீர்மானங்களினாலும் அவர்களது சிந்தைகள் திருப்பப்பட்டு இருளின் நிலைமையில் இருக்கிறார்கள். அதன் மூலம் அவர்களாலே சரியான தக்க அறிவு இல்லாதிருக்கிறார்கள். பெரும்பாலானவர்கள் சத்திய வெளிச்சத்தை காண முடியாமல் இருளில் இருக்கிறார்கள் – “இருளானது பூமியை மூடுகிறது.”

எனினும் உலகில் நீதியை சிநேகித்து அக்கிரமத்தை வெறுக்கிற சிலர் இருக்கக்கூடிய சந்தர்ப்பத்திற்கான காரணம் இருக்கிறது என்று நம்புகிறோம். இந்த வகுப்பாரை முதலில் எடுத்துக்கொள்ள தேவன் விரும்புகிறார். இந்த வகுப்பாரின் தெரிந்துகொள்ளுதல் சுவிசேஷயுக முழுவதும் நடந்து கொண்டிருக்கிறது. சகல நிலைமைகளும் சாதகமாக இருந்தால் உலகின் பெரும்பாலோர் தவறைக் காட்டிலும் சரியானதை தெரிந்துகொள்வார்கள். அவர்கள் பொருளாதாரத்தில் வசதியாகவும் சமூக நிலைமையில் பிரபலமாகவும் இருந்தால் தவறானவைகளுக்கு ஊழியம் செய்வதைக் காட்டிலும் சரியானவைகளுக்கு ஊழியம் செய்வதை தெரிந்துகொள்ளுவார்கள்.

இவர்கள் உண்மையிலேயே நல்ல ஜனங்கள். அவர்கள் நல்லதையே விரும்புவார்கள். அவர்கள் மிகவும் நீதியாகவும் நல்நடத்தை உடையவர்களாகவும்

இருக்கிறார்கள். அவர்கள் நல்லதை தெரிவு செய்வதில் பலமுள்ளவர்களாயில்லாதிருந்தால், நல்லதிற்காக தங்கள் ஜீவனை கொடுக்க விரும்பமாட்டார்கள். சொல்வதற்கு ஒன்று இருக்கிறது. தேவனுக்காக நான் நேசிக்கிறேன். சொல்வதற்கு இன்னொன்று இருக்கிறது. எனது நேரம், பலம், வளமையை அனைவருக்காகவும் அர்ப்பணிக்கிறேன்.

ஆனால் பிற்பாடு சொல்லப்பட்டவர்களைத்தான் தேவன் இப்பொழுது அழைக்கிறார். அதாவது சத்தியம் மற்றும் நீதிக்காக சிலுவையை எடுக்க விரும்புகிறவர்களைத்தான் அழைக்கிறார். நீதிக்கான அவர்களது அன்பை அவர் பாராட்டுவதாக அவர்களுக்கு உறுதிகூறி தேவன் அவர்களை உற்சாகப்படுத்துகிறார். அவர்கள் விசுவாச மார்க்கத்தில் தொடர்ந்தால் அவர்கள் கிறிஸ்துவின் ராஜ்யத்தில் அவருடன் கூட்டாளிகளாக்கப்படுவார்கள். அப்படிப்பட்ட வகுப்பாரைத் தான் அவர் தேடிக்கொண்டிருப்பதாக அவர்களிடம் அவர் கூறுகிறார். தேவன் அவர்களுக்கு சுவிசேஷத்தின் மகிமையான நம்பிக்கையை, தெய்வீக சுபாவம் மற்றும் மகிமையை முன் வைத்து, இவர்களை உற்சாகப்படுத்தி ஊக்கமளிக்கிறார்.

### வெளிச்சத்திற்கு ஏற்றாற்போல பொறுப்பு

ஆனால் இவைகளெல்லாம் இரவில் போய்க்கொண்டிருக்கிறது. ஏனெனில் இயேசு உலகிற்கு வந்து, உலகத்திற்கு ஒளியாக இருக்க வேண்டியிருந்தாலும், இந்த ஒளியானது இன்னும் உலகிற்கு வெளிச்சத்தைக் கொடுக்கவில்லை, இருளை சிதறடிக்கவில்லை. யூத ஜனங்கள் சந்திர வெளிச்சத்தை பெற்றிருந்தார்கள். அதாவது அவர்கள் நியாயப்பிரமாணத்தையும் அதன் வாக்குத்தத்தங்களையும் பெற்றிருந்தார்கள். சந்திரனானது தனக்கென்று ஒளியில்லாமல், அது சூரிய வெளிச்சத்தை பிரதிபலித்தது. அவர்கள் வெளிச்சத்தில் நடக்க விரும்பியிருந்தால், அவர்களுக்கு சந்திரனின் வெளிச்சம் இருந்தது. ஆனால் அவர்கள் அடிக்கடி வெளிச்சமாகிய நியாயப்பிரமாணத்தை விட்டு விலகி, நிழலில் நடந்தார்கள். யூதர்களுக்கு ஆபிரகாம், தாவீது மற்றும் தீர்க்கத்தரிசிகள் நட்சத்திரங்களாக இருந்தனர். இவர்கள் அவர்களது பாதைக்கு வெளிச்சத்தைக் கொடுத்தனர்.

ஆனால் இயேசு வந்தபோது, அவர் உலகிற்கு ஒளியாக இருந்தார்; அதாவது அவரே உலகிற்கு ஒளியாக இருக்கும்படி தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவராக இருந்தார். ஆனால் இயேசு ஒரு மனிதனாக எல்லாருக்கும் ஒளியாக இருக்கவில்லை. அவர் மாம்சத்தில் இருந்தபோது அவரிடமிருந்து வந்த வெளிச்சம் அந்த இடத்திற்குரியதாகவே இருந்தது. அது ஒளிர்ந்த அநேகருக்குக்கூட, அவரது வெளிச்சம் தெளிவற்றதாக இருந்தது. ஏனெனில் அவர்கள் குருடராகவும் அறியாமையிலும் இருந்தனர். சிலர் வெளிச்சத்தை காணக்கூடியவர்களாகவும் மற்றவர்கள் வெளிச்சத்தை காணமுடியாதவர்களாகவும் இருந்தனர் என்று இயேசு கூறினார். "உங்கள் கண்கள் காண்கிறதினால் அவைகள் பாக்கியமுள்ளவைகள்." (மத்தேயு 13:16) சில யூத தலைவர்கள் ஓரளவுக்கு வெளிச்சத்தை பார்த்தார்கள். அவர்கள் பார்த்த அளவுக்கு அவர்களுக்கு பொறுப்பு இருந்தது.

நமது கர்த்தர் அவர்களுக்கு உண்மையான வெளிச்சத்தை கொடுத்தார். ஆபிரகாமுடன் தேவன் செய்த உடன்படிக்கையின் ஆசீர்வாதங்களை பெறக்கூடிய நம்பிக்கையில் அவர்கள் இருந்தார்கள். அவர்கள் பரிசுத்தமாயிருக்க வேண்டும் என்பதை நியாயப்பிரமாணத்தின் போதனைகளிலிருந்து அறிந்தார்கள். ஆனால் அதன் உண்மையான திட்ட அளவு எவ்வளவு உயர்ந்தது என்பதை உணரவில்லை. அதன் விளைவாக வெளியரங்கமான சில நடவடிக்கைகளை கைக்கொள்வதால், ஆபிரகாமின் சந்ததியாக ஆக முடியும் என்று நினைத்தார்கள். நீங்கள் நியாயப்பிரமாணத்தில் எழுத்துக்களை கடைபிடிப்பதில் ஜாக்கிரதையாக இருங்கள். ஏனெனில் நீங்கள் கொசுவை வடிகட்டி ஒட்டகத்தை விழுங்குவீர்கள் என்று கூறினார். மேலும் சிறிய காரியங்களில் மிகவும் ஜாக்கிரதையாக இருந்து பெரிய காரியங்களை, முக்கியமானவைகளை விட்டு விடுகிறீர்கள் என்றும் அவர் கூறினார்!

அவர்கள் விதவைகளின் வீடுகளை பட்சிக்கிறார்கள் என்றும் அவர்கள் நியாயப்பிரமாணத்தின் நுட்பங்களை பயன்படுத்தி கொண்டு விதவைகளின் சொத்துக்களை அபகரிக்கிறார்கள் என்றும் அவர்களிடம் இயேசு கூறினார். இப்படியாக செய்து அவர்கள் நீதி, அன்பு மற்றும் இரக்கம் நிறைந்த பிரமாணமாகிய தேவனுடைய பிரமாணத்தை மீறினார்கள். சிலர் மட்டுமே உத்தம இஸ்ரயேலராக இருந்தார்கள். இவர்கள் மட்டுமே அந்த ஜாதியிலிருந்து தேர்தெடுக்கப்பட்ட ஆபிரகாமின் சந்ததியாக இருப்பார்கள். (ரோமர் 9;6; கலாத்தியர் 3:16,29)

ஆகையால் தெரிந்தெடுத்தல் நடந்தது. நல்ல ஆவியை, கிறிஸ்து பெற்றிருந்த அதே ஆவியை, நீதியையும், தேவனையும் தேவனுடைய பிரமாணங்களையும் நேசிக்கிற ஆவியை உடையவர்கள் தெரிந்தெடுக்கப்பட்டு, தெரிந்தெடுக்கப்பட்ட ஜனங்களானார்கள். இது போதுமானவர்களாக இல்லாதபடியால், பல்வேறு ஜாதிகளிலிருந்து மற்றவர்களை தேர்ந்தெடுத்தலை தொடர்ந்தார். இயேசு தமது சீஷர்களிடம் கூறியதாவது: "உங்கள் வெளிச்சம் மனுஷர்களுக்கு முன்பாக பிரகாசிக்கக்கடவது." மேலும் அவர் விளக்கை கொளுத்தி மரக்காலால் மூடி வைக்காமல், மற்றவர்களுக்கு தெரியும்படி விளக்குத் தண்டின் மேல் வையுங்கள் என்றார். ஆகையால் தேவனுடைய பிள்ளைகள் அனைவரும் ஒளியாக இருக்கிறார்கள். பரிசுத்த ஆவியை பெற்றவர்கள் மட்டுமே உலகில் உண்மையான ஒளியாக இருக்கிறார்கள். மற்றவர்கள் விஞ்ஞானம், புவியியல், ரசாயனம் போன்றவற்றில் ஒளியை உடையவர்களாக இருக்கிறார்கள். ஆனால் அவர்களது பெரும்பாலான வெளிச்சமானது இருளாக இருக்கிறது. எனினும் நமது கர்த்தர் தேவனுடைய திட்டத்தை ஒளி என்று குறிப்பிடுகிறார்.

அறநெறியில் வெளிச்சத்தை உடையவர்கள் மயக்க வெறி உடையவர்களாக ஆக மாட்டார்கள். புனிதத்தன்மையை கெடுத்தல் போன்ற காரியங்களில் ஈடுபடமாட்டார்கள். அவர்கள் அந்த திசைகளில் வெளிச்சத்தை பெற்றிருக்கிறார்கள். ஆனால் இது உண்மையான வெளிச்சம் இல்லை. முழு உலகமும் உண்மையான வெளிச்சத்தை இழந்திருக்கிறது. எனினும் அவர்கள் இன்னும் கொஞ்சம் ஆரம்ப வெளிச்சத்தை பெற்றிருக்கிறார்கள். அது மனிதனது மனசாட்சி மற்றும் தார்மீக உணர்வில் சாட்சி பகருகிறது. தர்சு பட்டணத்தானாகிய சவுல் இந்த வெளிச்சத்தை கொஞ்சம் பெற்றிருந்தார். இருந்தும் சபையை துன்பப்படுத்தினார். மனசாட்சி போதுமான வழிகாட்டியாக இல்லை. தேவனுடைய வார்த்தையின் வெளிச்சம் நமக்கு தேவைப்படுகிறது.

பரிசுத்த ஆவி சபையின் வெளிச்சமாக இருக்கிறது. அதன் மூலம் நாம் விசேஷமாக சத்தியத்தில் வழி நடத்தப்படுகிறோம். நமக்கு அதிக உறுதியான தீர்க்கதரிசன வசனம் உண்டு. இருளுள்ள ஸ்தலத்தில் பிரகாசிக்கிற விளக்கைப் போன்ற அவ்வசனத்தை கவனித்திருப்பது

நல்லது என்று பரிசுத்த பேதுரு நமக்கு கூறுகிறார். (2 பேதுரு 1:19) நீதிமான்களுடைய பாதையின் வெளிச்சம் "நடுப்பகல் வரைக்கும் அதிகமதிகமாய் பிரகாசிக்கிற சூரிய பிரகாசம் போலிருக்கும்." நாம் இன்னும் இருளில்தான் இருக்கிறோம். இருள் விலகி, பகல் வரும்வரை இருளில் தான் இருப்போம். பரிசுத்த பேதுரு கூறுவது போல, "விடியும் வரை," இந்த தீர்க்கதரிசன வசனம் நமக்கு தேவை. இப்படியாக ஒரு வேதவாக்கியம் இன்னொரு வேத வாக்கியத்தை தெளிவுபடுத்துகிறதை நாம் பார்க்கிறோம்.

நமது கிறிஸ்தவ நண்பர்களில் அநேகர், கர்த்தர் எந்த நாளிலும் எந்த நேரத்திலும் வருவார் என்று அப்போஸ்தலர் கூறுவதாக நினைக்கிறார்கள். ஆனால் நாம் வேத வாக்கியங்களை புரிந்து கொள்ள வரும் போது, தேவன் குறித்த காலத்தையும் நேரத்தையும் வைத்திருக்கிறார் என்பதை அறிகிறோம். மேலும் நாம் தேவனுடைய திட்டத்தை கற்றுக்கொள்ளும் போது, இரவின் நீளத்தையும், பகல் விடியும் நேரத்தையும் அவர் வெளிப்படுத்தியிருக்கிறார் என்பதைக் காண்கிறோம். காலை வந்துகொண்டிருந்தது என்பதையும் இரவானது முடிவுக்கு வந்து கொண்டிருக்கிறது என்பதையும் உணரக்கூடிய போதுமான அறிவை அப்போஸ்தலர் பெற்றிருந்தார். கிறிஸ்து தமது இரண்டாம் வருகையில் நீதியின் சூரியனாக இருப்பார் என்பதை அவர் அறிந்தார். நாமும் இதை அறிவோம். கிறிஸ்து உலகின் ஒளியாக இருப்பார் என்பதை அவர் அறிந்தார். இதை நாமும் அறிவோம். மேலும் மகிமையடைந்த சபையானது இயேசுவுடன் நீதியின் சூரியனாக இருக்கும் என்பதையும் அது தனது ஆரோக்கியமான கதிர்களுடன் எழும்பி உலகத்தை பிரகாசிப்பித்து, எழும்பச் செய்து ஆசீர்வதிக்கும் என்பதையும் நாம் அறிவோம்.

### விடியலின் அடையாளங்கள்

நாம் தேவனுடைய காலங்களையும், வேளைகளையும் கொஞ்சம் அறிவோம். எனினும் நாளையும் மணியையும் அறிவதற்கும் காலங்களையும் வேளைகளையும் அறிவதற்கும் ஒரு பெரும் வித்தியாசம் இருக்கிறது. உங்கள் போதகர் இந்த காலத்தில் மகா பிரிட்டனுக்கு போக நோக்கங்கொண்டிருந்தார் என்பதை நீங்கள் அறிந்திருக்கலாம். அந்த காலம் வந்த போது, நல்லது இதுதான் அதற்குரிய காலம் என்று கூறுவீர்கள். ஆம், ஆனால் என்ன நீராவி கப்பலில் செல்வார் என்பதை அறியமாட்டீர்கள். அவர் எத்தனை மணிக்கு லண்டனை அடைவார் என்பதை நாம் அறிவோம் என்று நீங்கள் கூறுவீர்கள். ஆனால் எப்பொழுது கப்பல் புறப்படும் என்பதை அறியோம் என்று கூறுவீர்கள். இப்படியாக கர்த்தர் தமது பிள்ளைகளை இருளில் விடமாட்டேன் என்று உத்திரவாதம் தந்திருக்கிறார். நாம் உலகத்தோடு இருளில் இராதபடிக்கு தேவையான அளவுக்கு வெளிச்சத்தையும் அறிவையும் பெற்றிருப்போம்.

அந்த நாள் நம்மேல் ஒரு திருடனைப்போல் வராது என்று சகோதரர்களாகிய நாம் நிச்சயப்படுத்துகிறோம். அதை எப்படி எதிர்பார்க்க வேண்டும் என்பதை நாம் அறிவோம். நேரத்தை நாம் அறிவோம். அப்போஸ்தலர்கள் இந்த காரியத்தை குறித்து அறிந்திருக்கவில்லை என்று நினைக்கிறவர்கள் சில வேதவாக்கியங்களை மேலோட்டமாக எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்று நாங்கள் நினைக்கிறோம். நாம் பார்த்துக்கொண்டிருக்கிற வசனத்தை உதாரணத்திற்கு எடுத்துக்கொள்ளுங்கள். "இரவு சென்று போயிற்று, பகல் சமீபமாயிற்று." பகலானது அடுத்த வருடமோ அல்லது அதற்கு அடுத்த வருடமோ விடியும் என்று இதன் பொருளாக நினைத்திருக்கிறார்கள்.

### பரிசுத்த பவுல் விசேஷித்த தகவலை பெற்றிருந்தார்

அப்போஸ்தலர் இப்படிப்பட்ட ஒரு யோசனையை வெளியரங்கமாக பெற்றிருக்கவில்லை. ஏனெனில் அவருடைய நிருபங்களில் ஒன்றில், அந்த நாள் எப்படி வரும் என்றும் அப்பொழுது ஆபத்துக்காலம் இருக்கும் என்றும் கர்த்தர் ஒரு கொடிய வஞ்சகத்தை அனுப்புவார் என்றும் பாவ மனுஷன் முதலில் வெளிப்படுவான் என்றும் விவரிக்கிறார். விசுவாச துரோகம் முந்தி நேரிட்டால் ஒழிய அந்த நாள் வராது என்று சபைக்கு உறுதியளிக்கிறார். அவர் அவர்களை ஞாபகப்படுத்துகிறதாவது: தானியேல் தீர்க்கதரிசனத்தில் சொல்லப்பட்டபடி பாழாக்கும் அருவருப்பு ஸ்தாபிக்கப்படும் வரை கர்த்தரின் இந்த நாள் வராது என்பதை இப்பொழுது அறியுங்கள். "எவ்விதத்தினாலும் ஒருவனும் உங்களை மோசம் போக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்." (2 தெசலோனிக்கியர் 2 அதிகாரம் முழுவதும்)

கொரிந்துவிலுள்ள சபைக்கு அவரது நிருபத்தில் பரிசுத்த பவுல் கூறியதாவது: "நாமெல்லாரும் நித்திரையடைவதில்லை, ஆனால் நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம்." (1கொரிந்தியர் 15:51.52) அவர்கள் நித்திரையடைவதில்லை, என்று பரிசுத்த பவுல் சொன்னதாக ஆதிகால சபை நினைத்தது. ஆனால் பரிசுத்த பவுல் , கிறிஸ்துவின் நாள் வரை சபையினரில் சிலர் இருப்பார்கள் என்று கூறி, முழு சபையையும் குறிப்பிட்டார். ஒரு இமைப்பொழுதிலே பூமிக்குரிய சரீரத்திலிருந்து வானத்துக்குரிய சரீரத்துக்கு மறுரூபமாக்கப்படுகிறவர்களில் அவர்கள் இல்லை என்பதை பரிசுத்த பவுலும் பேதுருவும் குறிப்பிட்டார்கள்.

ஆகையால் நமது தலைப்பு வசனத்துக்கு வருவோம். அப்போஸ்தலர் பவுல் கர்த்தரிடமிருந்து விசேஷித்த தகவலை பெற்றுக்கொண்டார் என்பதை நாம் அங்கீகரிக்கிறோம். அப்படியாக அவர் சொல்லுகிறார். அவர் மற்ற அப்போஸ்தலர்களைக் காட்டிலும் அதிகமான காட்சிகளையும் வெளிப்பாடுகளையும் பெற்றிருந்ததாக கூறுகிறார். அவருக்கு அந்த சமயத்தில் சொல்லப்பட்ட காரியங்களை வெளிப்படுத்துவது சரியாக இருக்காது என்று அவர் அறிவிக்கிறார். இந்த காட்சிகளை அவர் வெளிப்படுத்தக்கூடாது. அதன் பொருள் அவருக்கு இரகசியமாக கிடைக்கப்பெற்றன. (2கொரிந்தியர் 12:3) இப்படியாக அப்போஸ்தலருடைய மனது ஒளியூட்டப்பட்டு, அவரால் மகா அறிவுத்திறனுடனும் தெளிவுடனும் வல்லமையுடனும் எழுத முடிந்தது. அதன் மூலம் பரிசுத்த வேதவாக்கியங்களின் மேல் வெளிச்சம் அதிகரிக்கும் தகுந்த காலமாகிய தற்காலத்தில் நாம் அவரது எழுத்துக்களின் ஆழத்தைக் காணவும், சத்தியத்தை அதன் மூலம் கிரகித்துக் கொள்ளவும் முடிகிறது. இல்லையென்றால் அது இயலாததாக இருக்கும். நாம் செய்கிறோம். கிட்டத்தட்ட ஆழ்ந்த காரியங்களின் நமது அறிவு அனைத்தும் பரிசுத்த பவுலின் நிருபங்களிலிருந்து வந்ததாக இருக்கிறது. ஏனெனில் அவர் இந்த வெளிச்சத்தை பெற்றிருந்தார். அவர் எழுதிய அனைத்திலும் அது ஊடுருவியிருந்தது. அப்போஸ்தலர் காலத்தில் பவுல் மட்டுமே அறிந்திருந்த இரகசியமாயிருந்த அநேக காரியங்களை நாம் இன்றைக்கு ஆராயவும் புரிந்து கொள்ளவும் முடிகிறது.

### "கடைசி நாள்"

நமது தலைப்பு வசனத்தில் பேசப்படுவது கடைசி காலத்தை பற்றியதாகும். மார்த்தாள் லாசருவைப் பற்றி கூறுவதாவது: "உயிர்த்தெழுதல் நடக்கும் கடைசி நாளில் அவனும் உயிர்த்தெழுந்திருப்பான் என்று அறிந்திருக்கிறேன்." (யோவான் 11:24) கடைசி நாள் என்பது எது? அது மாபெரும் ஏழாம் நாள். இந்த நாள் இருளின் காலமல்ல, ஆனால் பகல் வெளிச்சத்தின் காலமாயிருக்கும். அதுஅப்படி இருக்குமானால் மற்ற ஆறு நாட்கள் இருள் மற்றும் பாவத்தின் இரவைக் குறிக்கிறது.

புதிய நாளின் காலையில் இருளின் அதிபதியின் ஆளுகை. ஒளியின் அதிபதியால் வீழ்த்தப்பட வேண்டும். இப்படியாக பகலானது வருகையை கட்டியங்கூறும், ஒவ்வொன்றும் ஆயிர வருடங்கள் அடங்கிய மாபெரும் ஆறு நாட்களின் கருத்தில் பார்க்கும் போது, அப்போஸ்தலர்களும் ஆதிகால சபையும் ஐந்தாம் நாளில் வாழ்ந்தார் என்பதையும் நாம் நினைவுகூர வேண்டும். ஏழாம் நாளுக்கு முன்னதாக மற்றொரு நாள் கடந்து போக வேண்டும். அதன்பிறகு கர்த்தரின் மகிமையின் மாபெரும் பிரகாசம் வரும். இந்த நிலைப்பாட்டிலிருந்து பார்க்கும் பொழுது அப்போஸ்தலரின் வார்த்தைகள் தெளிவாக இருக்கிறது.

இருண்ட காலத்தில் தேவனுடைய ஜனங்கள் கொஞ்சமாக வெளிச்சமும் அறிவும் பெற அனுமதிக்கப்பட்டார்கள். எனினும் அவர்கள் மாபெரும் அடையாளங்களை பெற்றிருந்தார்கள். ஆகையால் போப்பரசு அபிவிருத்தி அடைந்த போது, இதுதான் முன் கணிக்கப்பட்ட பாவ மனுஷன் என்றும் விசுவாச துரோகம் என்றும் தேவனுடைய ஜனங்கள் கூறினார்கள். இப்படியாக அவர்கள் தங்கள் இடத்தை நிர்ணயித்துக்கொண்டார்கள். இருண்ட காலத்தில் போப்பரசின் பாவ மனுஷன் என்ற தெளிவான புரிந்துகொள்ளுதல் இருந்தது என்று நாம் பார்க்கிறோம். எனினும் ஏற்ற காலத்துக்கு முன்னதாகவே சபையை முழு சத்தியத்துக்குள்ளும் வழி நடத்துவது தேவனுடைய நோக்கமல்ல. ராஜ்யம் ஸ்தாபிக்கப்படும் அந்த நாளையும் மணியையும் நாம் அறிவோம் என்று இப்பொழுது நாம் கூறிக்கொள்ளவில்லை. ஆனால் நாம் காலங்களையும் வேளைகளையும் அறியாதவர்களல்ல.

### "அந்தகாரத்தின் கிரியைகளை தள்ளிவிடுங்கள்"

ஆச்சரியமான நாளின் விடியலைப் பற்றிய இந்த அறிவின் கண்ணோட்டத்தில் அந்த நாளின் ராஜ்ய வகுப்பாராக நம்பிக்கை கொண்டிருக்கிற நாம் இப்பொழுது எப்படி நம்மை நடத்திக்கொள்வோம்? எப்படி நாம் வாழ்வோம்? "நாம் பகலின் பிள்ளைகளாக" இருந்தால் நாம் அதைக் காண்பிக்க வேண்டும் என்று அப்போஸ்தலர் கூறுகிறார். நாம் தேவனுடைய பிரதிநிதிகளும் ஸ்தானாபதிகளுமாயிருக்கிறோம். சீக்கிரத்தில் வந்து முழு பூமியையும் நிரப்பப்போகிற தேவனுடைய வெளிச்சமும், அறிவு மற்றும் மகிமையைப் பற்றி நாம் ஜனங்களுக்குச் சொல்ல வேண்டியவர்களாயிருக்கிறோம். தற்காலத்தையும் வரப்போகிற மகிமையான நிலைமைகளையும் வேறுபடுத்தி பார்ப்பதற்கு நாம் அவர்களுக்கு உதவ வேண்டும். அதன்மூலம் வெளிச்சத்தை விரும்பும் அனைவரும் தேவனுடைய வார்த்தையை கவனித்து ராஜ்ய வகுப்பாரின் அங்கங்களாக தயாராவார்கள்.

நாம் என்ன செய்யவேண்டும்? நாம் அந்தகாரத்தின் கிரியைகளை, சுயநலமாகவும் பாவமாகவும் இருக்கக்கூடிய ஒவ்வொன்றையும் நீக்க வேண்டும். ஏனெனில் சுயநலமாக இருப்பது பாவமாக இருக்கிறது. பாவமாக இருப்பது சுயநலமாக இருக்கிறது. இவைகளையெல்லாம் நாம் நீக்கிப்போட வேண்டும். ஏனெனில் நாம் புதிய ஒழுங்குகளைச் சேர்ந்தவர்கள். முழு ஆய்வுக்கும் நிற்காத எந்த கிரியையும், புது யுகம் வந்த பிறகு அதன் வெளிச்சத்தில் நிற்காத எந்தகிரியையும் இருளின் கிரியைகளாகும். ஆகையால் நாம் புதிய யுகத்தைச் சேர்ந்தவர்கள், பழைய யுகத்தை சேர்ந்தவர்கள் அல்ல என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு, நமது குடியுரிமைக்கும், ஒளியின் அதிபதிக்கு சார்பான பொறுப்புகளுக்கும் இசைவாகவும் இருளின் அதிபதிக்கும் அவனது கிரியைகளுக்கும் வழிகளுக்கும் எதிராகவும் நாம் வாழ வேண்டும்.

### "ஒளியின் ஆயுதங்களை தரித்துக்கொள்ளக்கடவோம்"

நாம் கிறிஸ்துவுடன் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளோம். நாம் நமது புதுசுபாவத்தின் சத்துருக்களுக்கு எதிராக நாம் போரிடுவோம். நாம் கர்த்தருடன் அவரது நீதியின் ராஜ்யத்தில் இணையும்படியாக தேவனுடைய பிள்ளைகளுக்கு பாத்திரர்களாகவும் ஆர்வத்துடன் பாடுபடுகிறவர்களாகவும் இருப்போம். நாம் இருளை நீக்கிப்போடும் போது நாம் என்ன செய்ய வேண்டும்? நாம் ஒளியின் ஆயுதங்களைத் தரித்துக் கொள்ள வேண்டும். ஒளியின் ஆயுதங்கள் எவை? சத்துருவின் ஆயுதத்திலிருந்து காக்கக்கூடியதுதான் இந்த ஆயுதம், இரட்சணியம் என்னும் தலைச்சீராவையும் உள்ளடக்கியது இது. இது நமது பெரிய சத்துருவின் தாக்குதல்களிலிருந்து சத்திய அறிவின் மூலமாக நமது புத்தி அறிவாற்றலை காக்கக்கூடியது.

அப்போஸ்தலர் வலியுறுத்துவது போல நாம், "சத்தியம் என்னும் கச்சையை நம் அரையில் கட்டினவர்களாயும், நீதி என்னும் மார்க்கவசத்தை தரித்தவர்களாயும், சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயுதம் என்னும் பாதரட்சையை கால்களில் தொடுத்தவர்களாயும் பொல்லாங்கன் எய்யும் அக்கினியாஸ்திரங்களையெல்லாம் அவித்துப் போடத்தக்கதாக, எல்லாவற்றிற்கும் மேலாக விசுவாசம் என்றும் கேடகத்தை பிடித்துக் கொண்டவர்களாயும் நிற்போமாக. இரட்சணியமென்னும் தலைச்சீராவையும் தேவ வசனமாகிய ஆவியின் பட்டயத்தையும் எடுத்துக்கொள்ளுவோமாக." (எபேசியர் 6:14-17) இதுதான் ஆயுதம். இதைக்கொண்டு தான் விழுந்துபோன சுபாவத்தின் தீமையான போக்கின் மூலம் வருகிற தாக்குதல்களில் நாம் நிலைத்து நிற்க வேண்டும். கிறிஸ்துவின் மூலம் நாம் "முற்றும் ஜெயங்கொண்டவர்களாகவும்" வர முடியும். ஜெயங்கொண்டவர்கள் என்ற மகிமையின் கட்டுடன் நாம் காலை விடிந்து வருகிற அந்த மகிமையான நாளில் தேவனுடைய ராஜாக்களாகவும் ஆசாரியர்களாகவும் ஆக்கப்படுவோம்.

### பரிசுத்தமான நோக்கத்தில் வெளிச்சம் வெளிப்படுகிறது

தீமை மற்றும் பாவம் பரவியிருக்கிற, வருத்தம், பாவம் மற்றும் மரணம் உள்ள இரவு காலத்திற்கு மாறாக வரப்போகிற பகலைப் பற்றி உருவக பாஷையில் அப்போஸ்தலர் தொடர்கிறார். தீமை செய்பவர்கள் இருளையே விரும்புகிறார்கள் என்று வேத வாக்கியங்கள் அறிவிக்கின்றன. அவர்களது நோக்கமும் இலக்கும் தெரியாமல் இருக்கும்படியாக இருளையே விரும்புகிறார்கள். ஏனெனில் அதை இரகசியமாக அவர்கள் செய்வது வெளிச்சத்தில் தெரியக்கூடாது என்றும் பொதுவாக எல்லாருக்கும் திறக்கப்படக்கூடாது என்றும் விரும்புகிறார்கள்.

பிறகு சபையின் மனப்போக்கு எப்படி இருக்க வேண்டும் என்று அப்போஸ்தலர் விவாதிக்கிறார். பகலில் நடக்கிறவர்கள் போல் சீராய் நடக்கக்கடவோம். சீராய் என்பது மனசாட்சியின்படியாகும். வெளியரங்கமாய் என்பது நமது நோக்கத்தை உலகத்தார் புரிந்துகொள்ள முடியுமென்றால், அவர்களுக்கு நாம் இரகசியமாக இருக்க வேண்டியதில்லை என்பதாகும். நமக்கு எந்தவித கெட்ட நோக்கம் இல்லை என்பதையும், அது சுத்தமானதாக, நேர்மையானதாக. நல்ல நோக்கத்துடன் என்பதை அவர்கள் அறிவார்கள். நமது கர்த்தர் உலகின் மாபெரும் ஒளியாக இருந்தார். ஆனால் அவர் தவறாக புரிந்துகொள்ளப்பட்டு, தவறாக சித்தரிக்கப்பட்டார். ஆகையால் அவரது சீஷர்கள் அனைவரும் அதற்கேற்றபடி ஒளியை உடையவர்களாக இருப்பதால், தன்னுடைய பிடி மனிதர்கள் மேல் நிலைத்திருக்கும்படி நாடுகிற சாத்தானிடமிருந்து தாக்குதலுக்கு ஆளாக வேண்டியிருக்கிறது.

எனினும் நமக்கு சேதம் அதிகமாக அல்லது குறைவாக இருந்தாலும், நமது வாழ்க்கையின் முழு மார்க்கமும் நேர்மையானதாக, நேரானதாக இருக்க வேண்டும். நமது வாழ்க்கை நீதிக்காக அர்ப்பணிக்கப்பட்டதாக இருக்க வேண்டும். நமது வாழ்க்கையில் ஏதும் நீதிக்கு மாறானதாக இராதபடி நாம் பார்த்துக்கொள்ள வேண்டும். தீமையானவைகளெல்லாம் வெளிப்படுத்தப்படுகிற நாளைப்போல நமதுஅனைவரின் வாழ்க்கையை உண்மையும் நேர்மையும் வெளியரங்கமாக்க வேண்டும். நன்மையானவைகளை காண்பித்து, தீய செயல்களை வெளிப்படுத்தி, இப்படியாக இவர்களது குணலட்சணத்தை அறியும்படி செய்து, கர்த்தர் மனிதர்களை எதை விரும்புகிறார்கள் என்ற சோதனையில் வைப்பார்.

தீமையையும் துன்மார்க்கத்தையும் விரும்புகிறவர்கள் அவர்கள் அதன் உண்மை நிறத்தை பார்த்து, அது எங்கே வழிநடத்துகிறது என்பதையும் அதின் விளைவுகளையும் பார்த்த பிறகு நன்மையை அல்லது தீமையை, ஒளியை அல்லது இருளை அறியவும் தேர்ந்தெடுக்கவும் முழு சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டு, இருளை தேர்ந்தெடுக்கிறவர்களுக்கு தேவன் கொடுப்பது இரண்டாம் மரணமாகும். தீமைக்கு கடைசியான பரிசும் தண்டனையும் அழிவும் தான். "துன்மார்க்கர் யாவரையும் தேவன் அழிப்பார்."

பரந்த அளவில் கர்த்தரின் நாளில், கிறிஸ்துவின் நாளில், ஆயிர வருட நாளில் ஒளியானது பரவும். இருளில் மறைந்திருக்கும் அனைத்தும் அம்பலப்படுத்தப்படும். இவைகளை விரும்புகிறவர்கள் நஷ்டத்தை அனுபவிப்பார்கள். வெளிச்சத்தை விரும்புகிற அனைவரும் ஆசீர்வதிக்கப்பட்டு மனித பூரணத்திற்கு முன்னேற்றம் அடைவார்கள்.

## மாம்சீக பலவீனத்தை ஜெயங்கொள்ளுவது எப்படி

ராஜாக்களாகவும் ஆசாரியர்களாகவும் இருக்கவும், கிறிஸ்துவுடன் ஆளுகை செய்யவும் உலகத்தின் நியாயாதிபதிகளாகவும் இருக்கவும் நம்பிக்கை கொண்டிருக்கிற சபை அங்கங்களின் நடத்தை முடிந்தவரை தேவனுடைய திட்ட அளவுக்கு இசைவாக இருக்க வேண்டும். கர்த்தருடைய அல்லது வேறு யாருடைய விசாரணைக்கு உட்படும்படியாக எல்லாம் நேர்மையாகவும் வெளியரங்கமாகவும் இருக்க வேண்டும். இப்படியாக வாழ்ந்து நமது விசுவாசத்தை கர்த்தருக்கு நிரூபிப்போம். துன்பத்தையும் தாக்குதல்களையும் சகிக்க விருப்பமாயிருந்து, நமது பிடிவாதத்தை அவருக்கு நிரூபிக்க வேண்டும். நமது மானிட பலவீனங்களையும் அபூரணங்களையும் ஜெயங்கொள்ளுவதற்கு நாம் மிகுந்த ஆர்வத்துடன் முயற்சி செய்ய வேண்டும். இப்படியாக தேவனிடத்திலும் நீதியினிடத்திலும் நமது அன்பை வெளிப்படுத்த வேண்டும். இந்த மகிமையான கொள்கைகளுக்கு நமது கர்த்தராகிய கிறிஸ்து உருவகமாக இருப்பதை நாம் பார்க்கிறோம். இதற்காகவே தேவன் நிற்கிறார். நாமும் அவரைப் போல அவரது மாதிரியாக இருக்கவேண்டும்.

தற்கால அதன் பரிசு ஏதுவாக இருந்தாலும், இருளின் பிள்ளைகளாக இராமல், வெளிச்சத்தின் கீழ், தேவன் பக்கம் இருக்க விருப்பங்கொள்ளும்படியாக, தேவனுடைய கிருபையான குணலட்சணம் மற்றும் முறைமைகளில் மேல் அன்பு செலுத்துகிறவர்களாக இருக்க வேண்டும். ஆகையால் நாம் பகலின் பிள்ளைகளாக, வெளிச்சத்தின் பிள்ளைகளாக நாம் நடப்போமாக. இப்படியாக மேலே நமது பொக்கிஷங்களை சேர்த்து வைப்போமாக. ஆண்டவரின் அடிச்சுவட்டில் நடக்க நாடுகிறவர்களுக்கும் தம்மை நேசிக்கிறவர்களுக்கு கர்த்தர் வைத்திருக்கிற மகிமையானவைகளுக்கும் நாம் நம்மை தயார்படுத்திக் கொள்ள வேண்டும்.

"அவர் நம்மை விலகுவதுமில்லை, நம்மை கைவிடுவதும் இல்லை;

அவர் தமது நித்திய உடன்படிக்கையை ஒருக்காலும் முறித்துப்போடுவதில்லை;

அவரது வாக்குத்தத்தத்தில் இளைப்பாறி, எதற்காக நாம் பயப்படவேண்டும்?

வருகிற வருடத்திற்கு தேவனே போதுமானவராக இருக்கிறார்.

பகலின் பிள்ளைகளே, இனிமேலும் பயப்படாதிருங்கள்,

ஏனெனில் அவரது வார்த்தை ஒழிந்துபோகாது."

## களியாட்டம் மற்றும் வெறிகளின் மொத்த உருவம்

நமது தலைப்பு வசனத்தின் முந்திய வசனத்தில் தன்னிலையில் சொல்லப்பட்ட நாம், நமது என்ற வார்த்தைகளிலிருந்து அப்போஸ்தலர் தன்னையும் உள்ளடக்கிய சபைக்கு பேசிக்கொண்டிருக்கிறார் என்பது தெளிவாக தெரிகிறது. உண்மையிலேயே நிருபத்திற்கு முன்னுரை இது தான் காரியம் என்று காண்பிக்கிறது. பரிசுத்த பவுல், உலகின் மனோபாவத்திற்கு மாறாக சபையின் மார்க்கம் எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும் என்று இங்கே காண்பிக்கிறார். "நடக்கக்கடவோம்" என்று அவர் சொல்லும் போது, களியாட்டம் மற்றும் வெறிகள் போன்ற வழியில் நடவாமல், நாம் தினமும் முன்னேறுவோமாக என்ற பொருளில் கூறுகிறார். கர்த்தருடைய பிள்ளைகள் எப்பொழுதாவது ஒரு தவறினால் மேற்கொள்ளப்பட மாட்டார்கள் என்று அவர் கூறவில்லை. இப்படியாக அவர்கள் மேற்கொள்ளப்பட்டால் அவர்கள் இயேசுவின் அடிச்சுவட்டில் நடக்காமல், எதிர்த்திசையில் நடப்பதாக அவர்கள் அறிய வேண்டும்.

சபையானது அந்த சமயத்தில் முழுவதும் வளர்ச்சி அடையாமல் கரு நிலையில் அபூரணமாக இருந்தது என்பதை நாம் நினைவுகூர வேண்டும். புது சிருஷ்டியானது தனது சொந்த சரீரத்தை உடையதாக இராமல், தேவனுடைய சத்துருவாகிய பூமிக்குரிய சரீரமே கொடுக்கப்பட்டிருந்தது. புது சிருஷ்டியானது இதையே கருவியாக பயன்படுத்த கடமைப்பட்டிருந்தது. புது சிருஷ்டியாக அவன் இறுதியில், மாம்சத்தின்படியல்ல, ஆவியின்படி நியாயந்தீர்க்கப்படுவான். ஏனெனில் தெரியாமல் செய்த குற்றங்களை கர்த்தர் ஈடுசெய்வார். பாவத்திற்கு கருவியாயிருந்த இந்த சரீரங்களை நீதியின் ஊழியத்திற்கு வைக்க மாட்டார். நமது தற்கால அனுபவங்கள் அனைத்தும் மாம்சத்தில் இருக்க வேண்டும்.ஏனெனில் வேறு எந்த கருவியும் ஊழியத்திற்கு நமக்கு இல்லை.

நாம் களியாட்டம் மற்றும் வெறிகளுக்கு நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். ஏனெனில் இவைகள் எல்லாம் உலகத்திற்குரியவைகள். பழங்கால பச்சனாலியன் கொடூரங்கள் சமூகத்தால் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படாத காலத்தில் நாம் வாழ்கிறோம். அநேகர் இதை இரகசியமாக அப்பியாசப்படுத்தலாம். ஆனால் இது சமூகத்தில் இருப்பது ஞானமானது அல்ல என்று அவர்கள் நினைக்கிறார்கள். மதுபானத்தில் விருப்பம் உள்ளவர்கள் மதுபானம் தயாரிப்பாளர்கள், மதுபான கடைக்காரர்கள் முதலானவர்கள் முன் காலத்தைப்போல அவர்கள் செய்ய முடியாது என்பதையும் ஒரு மிருக போதைக்கு போகும் வரை மதுபானத்தை விற்க முடியாது என்பதையும் உணருகிறார்கள். இந்த எல்லா தீமைகளும், புது இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும் போது விரட்டப்படும்.

## கர்த்தரின் ஆவி தெளிந்த புத்தியின் ஆவி

உண்மையான கிறிஸ்தவன் கர்த்தரின் சிந்தையை பெற்றிருக்கிறான். கர்த்தரின் சிந்தையானது எந்தவிதமான வெறிகளின் சுபாவத்திற்கும் முற்றிலும் மாறானது. கர்த்தரின் ஆவி ஒரு நிதானமான சிந்தையை, ஆலோசனை பண்ணுகிற சிந்தையை, நியாயமான சிந்தையை கொடுக்கிறது. களியாட்டம் மற்றும் வெறிகள் அனைத்தும் குழப்ப சிந்தையையும் போதையையும் தருகிறது. இப்படிப்பட்ட எந்த ஒரு வகையுடனும் கூட புது சிருஷ்டியானது தயை காண்பிக்க வேண்டும் என்று நாம் நினைக்கக்கூடாது. சில புது சிருஷ்டிகள் அவர்களது நடக்கையில் அக்கறையற்றவர்களாவார்கள் என்பது அப்போஸ்தலரின் ஆலோசனை அல்ல. புது சிருஷ்டி வளர்ந்து அதிக அனுபவம் பெறுவதால், உலகத்தனத்திற்கும் தகாத செயல்களுக்கும் வழி நடத்துகிற நிலைமைகள் மற்றும் சகல இடங்களை தவிர்ப்பதே நல்ல மார்க்கம் என்பதை அவன் கற்றுக்கொள்ள வேண்டும். அவன் தனது சிந்தைக்கு புது பொழுது போக்கை பெறவும் தனது மனதை புதிய திசையில், பரலோக காரியங்களில் திருப்பவும் கற்றுக்கொள்ள வேண்டும்.

பழங்காலத்தில் இருந்த சில கொடூரங்களை நாம் இப்போது பெற்றிருப்பது உண்மையாக இருந்தாலும் தற்காலத்தில் மிகவும் நாகரீகமான களியாட்டம் மற்றும் வெறிகளை பெற்றிருக்கிறது என்பதும் உண்மையாக இருக்கிறது. கட்டுக்கடங்காமல் போகக்கூடிய, அதாவது அறிவுக்கும் பொருந்தாத ஒழுங்கற்ற சமூக நிகழ்ச்சிகள் இருக்கின்றன. இந்த குறை கூறுவதை பேர் கிறிஸ்தவ சபைகளுக்கும் பொருத்தலாம். ஒரு வகையான களியாட்டத்தைப் பற்றி வெளிப்படுத்தின விசேஷத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. மகா பாபிலோன் பூமியின் குடிகளை தனது மதுவினால் வெறிக்கச் செய்தாள் என்று வாசிக்கிறோம். இது சில விஷயங்களில் மனதின் திகைக்க வைக்கக்கூடிய ஒன்றாகவும் மற்ற காரியங்கள் பைத்தியக்கார நிலைமையாகவும் இருக்கின்றன.

ஒரு காலத்தில் நம்புவதற்கு எந்தவித உண்மையான காரணம் இல்லாமல் நாம் நம்பினோம். உதாரணத்திற்கு தீ பற்ற முடியாத பிசாசுகள், நித்திய அக்கினிகள், மனுக்குலத்தை வறுத்தெடுத்தல் முதலானவைகள். ஆனால் அவைகள் கொடுமையான கனவுகளின் கொடுந்தேவதைகளாக இருந்தன என்பதைக் காண்கிறோம். தேவன் தம்முடைய வல்லமையுள்ள சக்திகளை, தமது சிருஷ்டிகளை காயப்படுத்தவும் தேவையற்ற கொடுமை செய்யவும் பயன்படுத்துவதில்லை. நாம் தப்பறையான போதகம் என்ற மதுவினால் தீவிரமான மயக்க வெறி கொண்டவர்களாக்கப்பட்டோம். நாம் இப்பொழுது நிதானமடைந்திருக்கிறோம். இப்பொழுது ஜனங்கள் கண் விழிக்கவும் தப்பறைகளின் முட்டாள்தனத்தின் விளைவுகளை ஜெயங்கொள்ளவும் முயற்சிக்க ஆரம்பித்திருக்கிறார்கள்.

சிலர் இந்த தப்பறைகளிலிருந்து வெளியேறியிருக்கிறார்கள். ஆனால் சிலர் மூர்க்க வெறி கொண்டிருக்கிறார்கள். இவர்களில் சிலர் நம்மை தாக்குகிறார்கள். நம்மை அழித்து விடுவதைப் போல அவர்கள் ஏவுகிறார்கள். அது தான் சத்தியம் என்று தப்பறைக்காக போராடுகிறார்கள். அவர்களது போரில் அவதூறு, வன்மம், பகைகள், சண்டைகள் மற்றும் மாம்சம் மற்றும் பிசாசின் மற்ற பல்வேறு கிரியைகளையும் பயன்படுத்துகிறார்கள். அவர்களது ஆயுதங்களின் தேர்வு, அவர்கள் தப்பறையின் போதனைகளால் குருடாக்கப்பட்டு மாயையின் கீழ் இருக்கிறார்கள் என்பதற்கு ஒரு ஆதாரமாக இருக்கிறது

## மத போதை (வெறி)

கூட்டங்களில் பெருங்களிப்பு உண்டாகும் அளவுக்கு சில சமயங்களில் களியாட்டம் இருக்கிறது. எல்லா வகையான களிப்பும், தீய ஆவிகள் மற்றும் பேய்கள் இருந்த ஒரு மத கூட்டத்தில் நாங்கள் ஒரு தடவை இருந்தோம். எனினும் ஜனங்கள் வெளியரங்கமாக உண்மையுள்ளவர்களாகவும் நேர்மையுள்ளவர்களா -கவும் இருந்தார்கள். இது சில வருடங்களுக்கு முன்பு நடந்தது. போதகர் பிரசங்க மேடையை அடித்தார். அப்பொழுது இரண்டு அல்லது மூன்று பேர் ஜெபம் முதலானவைகளை செய்ய முயற்சித்தனர். அது ஒரு வழக்கமான செயல்பாடாக இருந்தது. வாலிப ஜனங்கள் அங்கே போய் கடலைகளை சாப்பிட்டுக்கொண்டு கேலியாக சிரித்துக்கொண்டும் கொக்கரித்துக் கொண்டும் சர்க்கஸில் நடப்பது போல காணப்பட்டது. இந்த ஜனங்கள் வெளியரங்கமாக வெறியில் இருந்தார்கள். அது ஒரு வகையான மோசமான மதுவாக இருந்தது.

இந்த கொள்கை கடந்த கால தப்பறைகளிலிருந்து விடுவித்துக்கொண்ட சிலருக்கு பொருந்தும். சத்தியத்துக்குள் வந்திருக்கும் சிலரிடம் அராஜக ஆவி, ஒழுக்கக்குறைவான நடத்தை இருக்கிறது. சில சமயத்தில் அது வேதாகம கூட்டத்திலேயே வெளிப்படும். அவர்கள் தங்களது சொந்த கலவரத்தில் ஈடுபடுவார்கள். அவர்கள் தப்பறையான ஆவியிலிருந்து விடுபடவில்லை. அவர்கள் இன்னும் நீதியின் கொள்கைகளை அப்பியாசப்படுத்தவில்லை. தங்களது நடத்தைக்கு கர்த்தரின் ஆவியை, தெளிந்த புத்தியுள்ள ஆவியை அப்பியாசப்படுத்தவில்லை.

கலவர ஆவியை காண்பிக்கிறவர் சில சமயங்களில் வகுப்பின் தலைவராக இருப்பார். அப்படிப்பட்ட சமயத்தில் என்ன செய்யப்பட வேண்டும் என்று வேத வாக்கியங்கள் கூறுகின்றன. எந்த ஒரு சகோதரனும் எந்த ஒரு காரியத்தைக் குறித்தும் தனது சொந்த கருத்தை கொண்டிருக்க உரிமை உண்டு. ஆனால் இதை மற்றவர்கள் மேல் திணித்து மீறுவதற்கு உரிமையில்லை. அப்படி செய்வது கர்த்தரின் ஆவிக்கு எதிரானது. அந்த வழியில் நாம் நடக்கக்கூடாது. மற்றவர்கள் நமக்கு என்ன செய்ய வேண்டும் என்று நாம் விரும்புகிறோமா அதையே நாம் மற்றவருக்கு செய்ய வேண்டும் என்கிற பொன்னான பிரமாணத்தின் வழியில் நாம் ஜாக்கிரதையுடனும் ஜெபத்துடனும் நடக்க வேண்டும்.

''அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படி'' பரிசுத்தவான்களாக ஆகும்படி நாம் நடப்போமாக.

---


ஏழாம் சபையின் தூதனாகிய

சகோ. C.T. **ரசல்** அவர்களின் ரீ-பிரிண்ட்ஸின் தமிழாக்கத்தை வெளியிடுகிறோம்.

வெளியிடுபவர் :



சகோ. R. **செல்வராஜ்,** சென்னை வேதமாணவர் சபை

எண். 22, முதல் தெரு,ராஜீவ் நகர், காலடிப்பேட்டை, திருவொற்றியூர், சென்னை-600 019.

கைபேசி : 97909 00030, மின்னஞ்சல் : mbsa_selvaraj@rediffmail.com

Website : www.thestudiesinthescriptures.com



**FOR PRIVATE CIRCULATION ONLY**